Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்புகொள்ள
உள்நாட்டு வெளிநாடுகளுக்கான சகல
விதமான துரித தபால்/பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303, K.K.S. ROAD, JAFFNA T.P - 021 2222670
FAX - 222 3214 email - del - smskr@eureka.lk
(கி-2015)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 20 (13.01.2004) செவ்வாய்க்கிழமை இதழ்:104

# சர்வதேச சமூகம் சமாதான முயற்சிகளுக்கு இதய சுத்தியுடன் தொடர்ந்து உதவவேண்டும்!

## அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் வேண்டுகோள்

(கிளிநொச்சி)

**பல நாடுகள் இலங்கை அரசுக்கு சமாதானத்தை ஏற்படுத்துமாறு கூறிக்கொண்டு, ஆயுதங்களை வழங்கி - ஊக்கப்படுத்தி போருக்கு தயார்படுத்தி வருகின்றன.**

**சர்வதேச சமூகம் எந்த சூழ்நிலையில், எந்த நோக்கோடு சமாதான முயற்சிக்கு உதவ முன் வந்ததோ, அதே நிலைப்பாட்டில் நின்று - இதயசுத்தியுடன் தொடர்ந்தும் உதவவேண்டும். இதுதான், எமது எதிர்பார்ப்பு. அவ்வாறு செயற்பட்டால்தான், இரு தரப்பும் சமபலத்துடன் அந்த நிலைப்பாட்டில் பேச்சைத் தொடரமுடியும். இவ்வாறு, அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.**

கேணல் கிட்டு நினைவு முத்தமிழ் கலையரங்கு, புலிகளின் குரல் நடுவப்பணியகத்தில் நேற்று இடம்பெற்றபோது, அதில்கலந்துகொண்டு உரையாற்றியபோதே தமிழ்ச்செல்வன் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் உரையாற்றுகையில், இன்று ஏற்பட்டிருக்கும் இந்த புதிய' சூழலில் நாங்கள் இலங்கை அரசுக்கும், தென்னிலங்கை சக்திகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் தெளிவான நிலைப்பாட்டைச் சொல்ல எண்ணுகின்றோம். நாம் சமாதான வழியில் ஒருதீர்வை வேண்டுகிறோம். தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை பெற்றுக்கொள்ளும் நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தாலும் சர்வதேச சமூகம் தங்களை வலுப்படுத்திக்கொண்டு, மீண்டும் சமாதானத்துக்கு உதவவேண்டும். இலங்கை அரசு தமது செயற்பாட்டை தமிழர்களுக்கு எதிராகப் பயன்படுத்தி தமிழரை மீண்டும் ஏமாற்றநினைத்தால், அதற்கு தமிழ்மக்கள் தகுந்த அடி கொடுப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை.

அப்படியான ஒரு சூழலை தோற்றுவிக்காமல் அமைதி வழியைத் தொடர்ந்து பேணவேண்டுமாக இருந்தால் சிங்கள தேசம் நேர்மையோடும் - உண்மையோடும் இந்த சமாதான முயற்சிகளில் ஈடுபாடு கொள்ள வேண்டும்.

தங்களுடைய அதிகார சண்டைகளை தூக்கி(12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சிப்பாய்க்கு விளக்க மறியல்!

(யாழ்ப்பாணம்)

கப்புது வெளிப்பகுதியில் கடந்த சனி இரவு குடும்பஸ்தர் ஒருவரை இராணுவ வாகனம்மூலம் மோதிக்கொன்றுவிட்டு வாகனத்துடன் தப்பிச்சென்ற இராணுவ சாரதி ஒருவர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வரணியிலுள்ள 52 ஆவது படையணியைச் சேர்ந்த சந்தேக நபரான இவர், கப்புது படைமுகாமொன்றில் மறைந்திருந்தவேளையிலேயே இராணுவ பொலிஸ் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட சிப்பாயை நேற்று பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது, எதிர்வரும் 26 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் க. அரியநாயகம் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

சந்தேக நபர் தன்னை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு நீதவானைக் கோரியபோதும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விமான நிலைய நுழைவாயிலின் பாதுகாப்பு பொறுப்பிலிருந்து விமானப்படையினர் நீக்கம்!

(கொழும்பு)

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் நுழைவாயிலில் பாதுகாப்பு கடமைப் பொறுப்பிலிருந்து விமானப் படையினர் நீக்கப்பட்டு விமான நிலையப் பாதுகாப்பு அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். நேற்றுமுதல் இந்த மாற்றம் நடைமுறைக்கு வந்துள்ளது.

இது குறித்து, விமானநிலைய சேவைகள் அதிகார சபையின் பேச்சாளர் ஒருவர் கருத்து வெளியிடுகையில்,

விமான நிலைய நுழைவாயிலில் பாதுகாப்பு சேவையிலிருந்து மட்டுமே விமானப் படையினர் நீக்கப்பட்டுள்ளனர். விமானப் பயணிகள் மற்றும் விருந்தினர்களிடமிருந்து கிடைத்த முறைப்பாடுகளையடுத்தே, விமானப் படையினர் நுழைவாயிலில் பாதுகாப்பு கடமையிலிருந்து நீக்கப்பட்டனர்

அதேவேளை, விமான நிலையத்தின் உட்புறம் மற்றும் விமான ஓடுபாதைப் பகுதி உள்ளிட்ட பகுதிகளில் பாதுகாப்பு தொடர்ந்தும் விமானப்படை மற்றும் இராணுவத்தினரின் பொறுப்பிலேயே இருக்குமென்றும் குறிப்பிட்டார்.

## சோதியா நினைவு நிகழ்வில் தலைவர் பிரபா பங்கேற்பு!




(கிளிநொச்சி)

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மேஜர் சோதியாவின் 14 ஆம் ஆண்டு நினைவுநாள், சோதியா படையணியின் 8 ஆம் ஆண்டு ஆரம்பநாள் நிகழ்வுகளில் கலந்துகொண்டு மேஜர் சோதியாவுக்கு ஈகைச்சுடர் ஏற்றி அகவணக்கம் செலுத்தினார்.

வன்னியில் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் மகளிர் படையணியின் முதல் தளபதி மேஜர் சோதியாவின் 14 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வும் சோதியா படையணியின் 8 ஆம் ஆண்டு ஆரம்ப நாள் நிகழவும் நேற்றுமுன்தினம் சிறப்புற நடைபெற்றன.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சுவீடன் எதிர்க்கட்சி எம்.பிக்கள் தமிழ்ச்செல்வனுடன் சந்திப்பு!



(கினிநொச்சி)

சுவீடன் நாட்டின் நான்கு பெண் எதிர்ககட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமிழீழ அரசியற்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று கிளிநொச்சியில் சந்தித்து கலந்துரையாடினர்.

கொழும்பிலுள்ள சுவீடன் தூதரகத்தைச் சேர்ந்த ஆன்மேரி பலனியஸ் மற்றும் யுனிசெப்பின் கிளிநொச்சி மாவட்ட வதிவிடப்பிரதிநிதி பெனிபுறூன் இருவருடனும் இந்த நான்கு எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான கிறிஸ்ரீனா ஹஸ்மார்க், இல்லவி எங்கஸ்ரோம், லேனா, அடெல்சன், லிஸ்ஜறோத் மற்றும் இங்கர் றெனி ஆகியோரே கிளிநொச்சி வந்தவர்களாவர்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப்புலிகளின்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுநாயக்க விமானநிலைய பாதுகாப்பிலிருந்து விமானப்படையினரை நீக்கியதால் இன்னொரு தாக்குதலுக்கு வாய்ப்பு

### தேசப்பற்று முன்னணி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நுழைவாயிலில் பாதுகாப்புக் கடமையில் இருந்து விமானப்படையினரை அரசாங்கம் நீக்கியுள்ளதன் மூலம் விமான நிலையத்தின் மீது இன்னொருதாக்குதல் நடத்த புலிகளுக்கு வசதி ஏற்படுத்திக்கொடுத்துள்ளது என்று தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி குற்றம்சாட்டியுள்ளது.

கொழும்பில் நடந்த செய்தியாளர் மாநாட்டில் பேசிய ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச மேலும் தெரிவிக்கையில் -

அரசாங்கத்தின் இந்த முடிவினால் புலிகள் கனரக தளபாடங்களை இறக்குமதி செய்ய

(12 ஆம் பக்கம் பார்க்க)

# தியாகதீபம் திலீபன் மருத்துவமனை புங்குடுதீவில் நேற்று திறந்துவைப்பு

தியாகதீபம் திலீபன் மருத்துவமனை, நேற்றுக்காலை 10 மணியளவில் வேலணைப் பிரதேச உதவி பிரதேச செயலர் மு.நந்தகோபாலனால் திறந்துவைக்கப்பட்டது.

தேசிய எழுச்சிப் பேரவையின் அனுசரணையுடன் - தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினரால் 'தியாகதீபம் திலீபன் மருத்துவமனை' புங்குடுதீவு - பெருங்காட்டில் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

புங்குடுதீவு, நயினாதீவு ப.நோ.கூ சங்கத் தலைவர் தலைமையில் நேற்று 10 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெற்றது. பொதுச்சுடரினை கரும்புலி கப்டன் ரங்கனின் சகோதரர் கு.உதயசிவன் ஏற்றிவைத்தார்.

தேசியக்கொடியினை தீவகக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் ந.கண்ணன் ஏற்றிவைத்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து, தியாகி திலீபனின் திருவுருவப்படத்துக்கு மருத்துவப் பொறுப்பதிகாரி வண்ணன் சுடர ஏற்றிவைத்தார். மாவட்ட அரசியற்துறை மகளிர் பிரிவுப் பொறுபபாளர் கலைவிழி மலர்மாலை அணிவித்தார்.

தியாகதீபம் திலீபன் மருத்துவமனை பெயர்ப்பலகையினை யாழ். பல்கலைக்கழக உடற்கல்வித்துறை விரிவுரையாளர் மா.இளம்பிறை திரைநீக்கம் செய்துவைத்தார்.

மருத்துவமனையை வேலணை பிரதேச உதவி பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் திறந்துவைத்தார்.

# மின்சாரம் தடைப்பட்ட நேரம் பெண்ணின் சங்கிலி திருட்டு!

வர்த்தக நிலையம் ஒன்றுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிய பெண்ணொருவரின் சங்கிலியைத் திருடியவர் - கலாசாரம் பேணும் குழுவினரிடம் அகப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு 9 மணிக்கு ஆனைக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்றது. இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது மின்சாரம் தடைப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய திருட்டு நபர் - பெண்ணின் கழுத்திலிருந்த சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியோட முற்பட்டார். அப்போது சங்கிலி தவறி நிலத்தில் வீழ்ந்துள்ளது.

அச்சமயம் பெண் கூச்சலிடவே, அந்தப் பகுதியில் நின்ற இளைஞர்களால் பிடிக்கப்பட்டு கலாசாரம் பேணும் குழுவினிடம் ஒப்படைக்கப்பட்டார்.

## இளைஞர்கள் சிலரால்

# பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்ததாக யுவதி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி!

(யாழ்ப்பாணம்)

கத்தியைக் காட்டி மிரட்டி பாலியல் பலாத்காரம் செய்யமுயற்சித்ததாகத் தெரிவித்து - 17 வயது யுவதி ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொட்டடிப் பகுதியைச் சேர்ந்த இந்த யுவதி நேற்றுமுன்தினம் இரவு வைத்தியப் பரிசோதனைக்காக - யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் பொலிஸாருக்கு அளித்த முறைப்பாட்டில் தெரிவித்ததாவது,

தான் கடந்த சில மாதங்களாக காதலித்துவந்த நபர் - நேற்றுமுன்தினம் இரவு 6 மணியளவில், தன்னுடன் வருமாறு அழைத்ததாகவும், அவருடன் சென்றபோது ஒரு மறைவிடமொன்றுக்கு அழைத்துச் சென்ற அவர் தன்னைப் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்தார்.

அவ்வேளை, அங்கு மறைந்திருந்த வேறு சிலரும் கத்தியைக் காட்டி மிரட்டி கொலைசெய்துவிடுவோம் - கத்தாதே எனக்கூறி பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சித்த வேளை - தான் கூச்சலிட்டு கத்தியதால் அவர்கள் தன்னை விட்டுவிட்டு ஓடியதாகவும், அங்கு வந்த சிலர் தன்னை வைத்தியசாலையில் அனுமதித்ததாகவும் தெரிவித்தார். (ப)

# இலவச வைத்தியசேவை

சந்நிதியான் ஆசிரமத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றுவரும் இலவச வைத்தியசேவையுடன் - புதன்கிழமைகளிலும் பொதுவைத்திய சேவை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கம்போல மகப்பேற்று நிபுணரின் சேவையும் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறுமெனவும், ஆச்சிரம இயக்குநர் மோகனதாஸ் சுவாமிகள் தெரிவித்துள்ளார்.

# புதிய சிறைச்சாலைக் கட்டடப்பணிகள் கட்டடத் திணைக்களத்திடம் ஒப்படைப்பு

யாழ். பண்ணைப் பகுதியில் சிறைச்சாலைக்கு புதிய கட்டடத்தை அமைப்பதற்கான பொறுப்பை - கட்டடத் திணைக்களம் பொறுப்பேற்றிருப்பதாக, யாழ்.சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்.சிறைச்சாலையின் இடநெருக்கடி குறித்துக் கேட்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

தற்போது இயங்கிவரும் யாழ். சிறைச்சாலைக் கட்டடமானது, 200 கைதிகளைக்கூட கொள்ளக்கூடிய இடவசதியைப் பெற்றிருக்கவில்லை. அப்படியிருந்தும் 282 கைதிகள் அங்கு சிறைவைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் பலர் இடவசதியில்லாமல், நிலத்தில் படுத்துறங்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இந்த இடநெருக்கடி நிலையைப் போக்குவதற்காக - புதிய கட்டடத்தை விரைவில் அமைப்பதற்காக, கட்டடத் திணைக்களத்திடம் அந்தப் பணி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனைவிட, சிறைச்சாலை ஊழியர்களின் பற்றாக்குறையும் இங்கு நிலவிவருகிறது. 60 இற்கும் மேற்பட்ட சிறைச்சாலை ஊழியர்கள் பணிக்குத் தேவையாக இருக்கின்றபோதும், 42 பேர் மட்டுமே பணியில் உள்ளனர்.

நீர், உணவு மற்றும் சில அடிப்படை வசதிகள் போதியளவில் செய்துகொடுக்கப்பட்டு வருகின்றது. எனினும் விரைவில் இத்தகைய சில குறைபாடுகளை நீக்குவதற்காக இப் புதிய கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

ராஜா யாழ்ப்பாணம்.
இன்றும் நாளையும்
ராஜ்கிரண், ஸ்ரீ, கருணாஸ் நடித்த
கொஞ்சிப் பேசலாம்
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30 (பு.நே)
15 முதல்
பொங்கல் வெளியீடு - பிரசாந்தின்
ஜெய்
(சி-2005)

திறைஞ்சனாஸ் சங்கானை
விஜய், ஜோதிகா நடித்த
குஷி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
KEOMA
(சி-2004)

# யாழ். பல்கலைக்கழகத்தில் 'நினைவுகள் மீள்தல்' நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

'நினைவுகள் மீள்தல்' நூல் வெளியீட்டுவிழா - இன்று பி.ப 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர்கூடத்தில் யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் ப.பகீரதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நூலினை தா.இராமலிங்கம் வெளியிட்டுவைக்க, சமூகவியல் அரசறிவியல்துறைத் தலைவர் அ.யேசுராசா வெளியீட்டுரை நிகழ்த்துவதுடன், தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் மதிப்பீட்டுரையை நிகழ்த்துவார்.

முழங்காவில் பிரதேசத்தில்
14 சனவரி 2004 முதல்
உங்கள் அருகில் உங்கள் தெரிவில்
உங்களுக்காகவே

வைப்பு வசதிகள்
❖தேட்ட வைப்புக்கள்
❖நிலையான வைப்புக்கள்

கடன் வசதிகள்
❖தங்க அடைவுக் கடன் சேவை
❖ஏனைய கடன் வசதிகள்
❖மேலும் பலவகை வைப்பகப்பணிகள்

உங்கள் நம்பிக்கையின் சின்னம்

தமிழீழ வைப்பகம் BANK OF TAMILEELAM

(சி-2123)

தமிழீழ வைப்பகம்
வாருங்கள் உங்கள் வளமான வாழ்வுக்கு வழிகாட்டுகின்றோம்

தமிழீழ வைப்பகம்
தமிழரின் காப்பகம்

# இரு அமைச்சுகளை பொறுப்பேற்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் அறிவிப்பு !

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்திடமிருந்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால், பொறுப்பேற்கப்பட்ட மூன்று அமைச்சுக்களில் இரண்டினை வழங்க ஜனாதிபதி தயாராக இருப்பதாக, ஜனாதிபதியின் செயலாளரான டபிள்யூ.ஜே. எஸ். கருணாரட்ண பிரதமர் ரணிலுக்குக் கடிதம் ஒன்றினை அனுப்பியுள்ளார்.

இதன்படி பாதுகாப்பு அமைச்சைத் தவிர, ஊடகத்துறை அமைச்சையும், கிறிஸ்தவ விவகார அமைச்சையும் வழங்குவதற்குத் தயாரெனவும், இந்த அமைச்சுக்களுக்கு முன்பு பொறுப்பாக இருந்த இம்தியாஸ் பாக்கீர் மாக்காரையும், ஜோன் அமரதுங்கவையும் நேரடியாக ஜனாதிபதி செயலகத்துக்கு வந்து ஜனாதிபதிக்கு முன்னர் மீள சத்தியப் பிரமாணம் எடுத்து அமைச்சுக்களை பொறுப்பேற்குமாறும் அந்தக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்ட அமைச்சுக்களில் செய்யப்பட்ட மாற்றங்கள் காரணமாகவே இந்த இரு அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படுவதாகவும், போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சராக திலக் மாரப்பன தொடர்ந்தும் இருப்பதால், அதில் எவ்வித பிரச்சினையும் இல்லையெனவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளரது கடிதம் தொடர்பாக ஐக்கிய தேசிய முன்னணி அரசு எவ்வித கருத்தையும் இதுவரை தெரிவிக்கவில்லை.

இதனிடையே, ஜனாதிபதியால் பொறுப்பேற்கப்பட்ட பாதுகாப்பு அமைச்சுத் தொடர்பான ஆலோசனைக் குழுவிற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தங்கள் பிரதிநிதிகளின் பெயர்களை இதுவரை தெரிவிக்கவில்லை.

இந்தக் குழுவில், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த மஹிந்த யாப்பா அபேவர்த்தன, லக்ஷ்மன் கதிர்காமர், சுமேத ஜயசேன, எம்.கே.டி.எஸ்.குணவர்த்தன, அர்ஜுன ரணதுங்க, விமல் வீரவன்ச மற்றும் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, இரா. சம்பந்தன் ஆகியோர் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வழமையாக, இவ்வாறான குழுவில் அரசாங்கத்தைச் சேர்ந்த 11 நாடாளுமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த 9 நாடாளுமன்ற உறுப்பினர்களும் இருப்பது வழக்கம். அத்துடன் உள்துறை மற்றும் தகவல் தொடர்பு அமைச்சுக்கு, இதுவரை எவ்வித சமரசக் குழுவும் உருவாக்கப்படவில்லை.

### ஆண்டு 6 முதல் 11 வரை

# ஆங்கிலமொழி மூலம் பாடங்கள் கற்பிக்கப்படும்

அரசாங்கப் பாடசாலைகளில் தரம் 6 தொடக்கம் 11வரையிலான வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட பாடங்களை ஆங்கில மொழிமூலம் கற்பிப்பதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

கணிதம், விஞ்ஞானம், சுகாதாரம், சமூகக்கல்வி ஆகிய நான்கு பாடங்கள் இந்த ஆண்டு தொடக்கம் முதற கட்டமாக ஆங்கிலமொழி மூலம் போதிக்கப்படவுள்ளதாக மனிதவள அபிவிருத்தி, கல்வி, சுகாதார அலுவல்கள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் இந்திராணி காரியவசம் தெரிவித்தார்.

ஆங்கிலமொழி மூலம் பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர்களுக்கு தொடரான பயிற்சிகள் வழங்குவதற்காக மாகாணமட்டத்தில் பயிற்சி நிலையங்களை நிறுவுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த பயிற்சி நிலையங்களில் சேவையாற்றுவதற்காக ஒரு மாகாணத்தில் இருந்து ஒரு பாடத்துக்கு 12 வாரகாலம் ஆங்கிலமொழி மூலம கற்பித்தல் பயிற்சிக்காக ஆசிரியர்களை அனுப்புவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## போதைப் பொருள் வைத்திருந்த இளைஞர் பொலிஸாரால் கைது!

25 கிராம் எடையுடைய போதைப் பொருள் வைத்திருந்த இளைஞர் ஒருவ்ரை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தச் சம்பவம் மன்னார் - பள்ளிமுனைப் பகுதியில் இடம்பெற்றது.

மன்னார் - பள்ளிமுனைக் கடற்கரைட் பகுதியில் ஹெரோயின் போதைப பொருளை பாவித்துக் கொண்டிருந்த சமயமே 24 வயது நிரம்பிய இளைஞனிடம் இருந்து 25 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைபபற்றப்பட்டது. இவரைக் கைதுசெய்த பொலிஸார் மன்னார் நீதிவானின் முன்பாக நிறுத்தினர். இவர் தற்போது 14 நாட்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

### -கடந்த வருடத்தில் மட்டும்-

# போதைப்பொருள் வைத்திருந்த 346 பேர் மன்னாரில் கைது!

(மன்னார்)

கடந்த வருடத்தில் மட்டும் மன்னார் மாவட்டத்தில் போதைப் பொருள் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 346 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக மன்னார் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் நான்கு பேர் ஒரு கிலோவிற்கும் கூடுதலான ஹெரோயின் போதைப் பொருளை வைத்திருந்தவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த போதைப் பொருட்கள் இந்தியாவிலிருந்து கடல்வழி மூலமாக மன்னார்ப் பகுதிக்கு கொண்டுவரப்பட்டு நாட்டின் ஏனைய இடங்களுக்கு அனுப்பப்படுவதாகவும் இதற்கு மன்னாரில் இருபது பேர் சூத்திரதாரிகளாகச் செயற்படுகின்றார்கள் எனவும் மன்னார் பொலிஸ அதிகாரியான வி.ஏ.ஜே. பிரேமசிறி தெரிவித்தார்.

இந்தப் போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்த மன்னாரிலுள்ள கடற்கரையோரங்களில் காவல் நிலைகள் அதிகரிக்கப்பட்டு, கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தற்போது இந்த போதைப்பொருள் கடத்தல் குறைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# எலிகளால் பரவும் ஒருவகை காய்ச்சல்!

எலிகளால் ஏற்படும் ஒரு வகைக் காய்ச்சல், நாட்டில் வேகமாகப் பரவி வருவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மக்கள் உள்ளூர் விலங்குகள் தொடர்பாக மிகவும் கவனமாக இருப்பதுடன் தாம் வாழும் சூழலையும் மிகவும் சுத்தமாக வைத்திருக்குமாறும் சுகாதார அமைச்சு கேட்டுள்ளது.

இதேவேளை கடந்த டிசெம்பர் மாதம் டெங்கு நோய் அறிகுறிகளுடன் பலர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அடையாளம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் தேவராஜா தெரிவிக்கையில் கடந்த மாதம் இடம்பெற்ற கிளினிக்கில் டெங்கு அறிகுறியுடைய 30 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர். இவர்கள் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்களா என்பதை இனித்தான் பரிசோதித்து உறுதிப்படுத்த வேண்டும்.

சுகாதார அமைச்சு தகவல் தருகையில், இந்த மாத முதல் வாரத்தில் டெங்கினால் பீடிக்கப்பட்டவர்களென சந்தேகிக்கப்பட்டவர்களின் தொகை அதிகரித்து காணப்பட்டதாகத் தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தல் டெங்கு கூடுதலாகப் பரவுவதற்குக் காரணம் ரயில் பயணங்களே எனவும பணிப்பாளர் தேவராஜா தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வருடம் டெங்கு அறிகுறியுடைய நாலாயிரம் பேர் இனங்காணப்பட்டதாகவும் இதில் கொழும்பில் 129 பேரும், கண்டியில் 102 பேரும், அநுராதபுரத்தில் 37 பேரும், குருநாகலில் 32 பேரும், கம்பஹாவில் 36 பேரும் இனங்காணப்பட்டதாகவும், டெங்கு என்ற சந்தேகத்தின் பேரில் 32 நோயாளிகள் இறந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் என்பது வழமையான ஒன்றாகிவிட்டதெனவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்தது.

# கொழும்பிலுள்ள உல்லாச விடுதி ஒன்றில் அமைச்சர்களின் புதல்வர்கள் தாக்குதல்!

## பூரண விசாரணை நடத்துமாறு ஜனாதிபதி உத்தரவு

(கொழும்பு)

கொழும்பு நகரிலுள்ள உல்லாச விடுதியொன்றில் அமைச்சர்கள் இருவரின் புதல்வர்கள் தாக்குதலில் ஈடுபட்டமை தொடர்பாக பூரண விசாரணைகளை நடத்தி அறிக்கை சமர்பபிக்குமாறு பொலிஸ்மா அதிபர் இந்திரா டி சில்வாவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பணித்துள்ளார்.

அமைச்சர் எஸ்.பி.திசநாயக்கவினதும், அமைச்சர் மகிந்த விஜயசேகராவினதும் புதல்வர்கள் கொழும்பிலுள்ள ஆடம்பர விடுதியொன்றில் தாக்குதல் நடத்தினர். கடந்த வெள்ளி இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தாக்கப்பட்டோரில் அமைச்சர் கபீர் காசிமின் உறவினர்களும் அடங்குவர்.

ஹில்டன் ஹொட்டேலின் அரச விடுதிக்கு அமைச்சர் கபீரின் உறவினர்கள் சென்று கொண்டிருந்தபோது அமைச்சர்களின் புதல்வர்கள் அவர்களைத் தாக்கியதாக கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் புகார் செய்யப்பட்டிருந்தது.

இந்த இரண்டு அமைச்சர்களின் புதல்வர்கள் தற்போது கொழும்பு நகரை விட்டு வெளியேறியிருப்பதாகவும் இவர்கள் கடந்த காலங்களில் நடைபெற்ற சிறிய சிறிய தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் கொழும்பு பொலிஸார் தெரிவித்தனர்

# அரசியல் நெருக்கடிக்கு தீர்வுகாண நாடாளுமன்ற தேர்தலே சிறந்தது!

## -தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தெரிவிப்பு-

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கு நிரந்தரத் தீர்வை எட்ட வேண்டுமெனில் நாடாளுமன்றத் தேர்தல் ஒன்றை நடத்துவதே சிறந்தது என தேசப்பற்றுள்ள இயக்கம் நேற்று முன்தினம் கொழுமபில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றிய ஜே.வி.பி யின் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடமிருந்து மூன்று முக்கிய அமைச்சுக்களை ஜனாதிபதி பறித்திருந்தார். இதனால் அரசாங்கம் மேற்கொண்ட சமாதானப் பேச்சு தடைபபட்டதுடன் அரசியல் நெருக்கடிகளும் ஏற்பட்டன. இந்நிலையில் அரசியல் நெருக்கடி தொடர்ந்து செல்வதால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்லவேண்டிய பொறுப்பை ஜனாதிபதி எடுக்கவேண்டும் என பிரதமர் தெரிவித்திருக்கிறார். இதனை மக்கள் ஆணை ஒன்றின் மூலம் பிரதமர் பதிலளிக்கவேண்டும் என விமல் வீரவன்ச தெரிவித்தார்.

# கடந்த ஆண்டில் உலகம் முழுவதிலும் 91 பத்திரிகையாளர் கொல்லப்பட்டனர்!

கடந்த ஆண்டில் உலகம் முழுவதிலும் 91 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர் என, சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக் யுத்தமே இதற்கு முக்கிய காரணமாக இருந்தது. யுத்தம் மற்றும் ஊழல் தொடர்பான விபரங்களைச் சேகரித்த வேளையிலும் பல பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர். 2002 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது - 2003 ஆம் ஆண்டில் பத்திரிகையாளர்களின் மரணங்கள் 23 வீதத்தினால் அதிகரித்துள்ளன. இந்த மரணங்கள் 25 இற்கும் அதிகமான நாடுகளில் இடம்பெற்றுள்ளன.

பத்திரிகைத்துறையிலும், செய்தி சேகரிப்பிலும் ஏற்படும் மரணங்களில் பெரும்பாலானவை - யுத்தம் காரணமாகவே ஏற்படுகின்றன. ஆயினும், திட்டமிட்ட கொலைகள் மற்றும் தவறான இடத்தில், தவறான நேரத்திலிருத்தல் போன்ற காரணங்களாலும் சில மரணங்கள் சம்பவித்துள்ளன.

யுத்தத்தினாலும், செய்தி ஊடகங்கள் தொடர்பான செயற்பாடுகளில் குழப்பம் போன்ற காரணங்களாலும் 2003 ஆம் ஆண்டு பத்திரிகைத் துறைக்குத் துக்ககரமான ஆண்டாக அமைந்துவிட்டது.

ஈராக் யுத்தம், கொலம்பியாவில் குழப்பங்கள் மற்றும் பிலிப்பைன்ஸ் வன்முறைகள் போன்றவற்றில் - கடந்த ஆண்டில் பல பத்திரிகையாளர்கள் இலக்குவைக்கப்படுவதை - பத்திரிகைத்துறை தொடர்பான தரப்புகள் கடுமையாக எச்சரித்துள்ளன.

ஈராக்கில் 18 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டனர். மேலும் இரு பத்திரிகையாளர்கள் காணாமற்போயுள்ளனர். யுத்தம் நடைபெறும் இடங்களில் பத்திரிகையாளர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படவேணடும் என்பதையே இந்தச் சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

அரசியல் ஊழல்களை அம்பலப்படுத்த முயற்சிக்கும் பத்திரிகையாளர்கள் - இலக்குவைத்துத் தாக்கப்படுகின்றனர்.

கொலம்பியாவில் கடந்த மார்ச் 2003 இல் ஊழல் தொடர்பான அறிக்கைகளை வெளியிட்டுவந்த ஒரு பத்திரிகையாளர் - இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பிலிப்பைன்ஸ் வானொலிச் செய்தியாளர் ஒருவர் கடந்த செப்ரெம்பரில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கடந்த ஆண்டில் கொலம்பியாவில் அந்நாட்டுப் பத்திரிகையாளர்களும், பிலிப்பைன்ஸ் பத்திரிகையாளர்களும் கொல்லப்பட்டனர்.

செய்திச் சுதந்திரத்தின் ஆணிவேராக பத்திரிகைத்துறை உள்ளது. ஒவ்வொருதடவையும் பத்திரிகையாளர்கள் இறக்கும்போதும், தகுந்த விசாரணைகள் நடைபெறுவது உறுதிசெய்யப்படவேண்டும். நீதியும், ஜனநாயகமும் இதை வலியுறுத்துகின்றன.

பத்திரிகையாளர்களுக்கு மேலதிகப் பாதுகாப்பும், காப்புறுதியும் வழங்கப்படவேண்டும் என்பதையே இந்த மரணங்கள் ஏடுத்துக்காட்டுகின்றன. பத்திரிகையாளர்களை இலக்கு வைப்பதையும், அவர்களது பாதுகாப்பு உதாசீனம் செய்யப்படுவதையும் தடுப்பதற்குச் சர்வதேச சட்டங்களில் திருத்தம் செய்யப்படவேண்டும் எனச் சர்வதேச பத்திரிகையாளர் சம்மேளனம் தனது அறிக்கையில் கேட்டுள்ளது.

## தம்மிக கொலை குறித்து பூரண விசாரணைக்கு பணிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பில் இருந்தபோது நீதிமன்றத்துக்குள் வைத்து கைத்துப்பாக்கி ஒன்றினால் பாதாள உலகத தலைவர் தம்மிக அமரசிங்க சுட்டுக் கொல்லப்ட்ட சம்பவம் தொடர்பாக உடனடியாக பூரணவிசாரணைகளை ஆரம்பிக்குமாறு சிறைச்சாலைகளின் ஆணையாளர் ரூமி மர்ஸூக் உத்தரவிட்டுள்ளார்.

## இரவு வேளை வரும் வாகனங்கள் பொலிஸாரால் மறித்து சோதனை

(வவுனியா)

வவுனியா- பறையனாலங்குளம் வீதியிலுள்ள பிரமனாலங்குளம், பூவரசங்குளம், நெலுக்குளம், குருமன் காட்டுச்சந்தி போன்ற இடங்களில் இரவில வரும் வாகனங்கள் நேற்று முதல் பொலிஸாரால் மறித்து சோதனையிடப்படுகின்றன.

அண்மைக் காலமாக மன்னாரிலிருந்து பெருமளவு போதைப் பொருட்கள் வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதே இந்தச் சோதனைக்குக் காரணம் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

## வலப்பனை மண்சரிவில் மூவரைக் காணவில்லை

(கண்டி)

வலப்பனையில் ஏற்பட்ட மண்சரிவில் சிக்கிய மூவர் காணாமற்போயுள்ளனர்.

நேற்றுக்காலை ஏற்பட்ட மண்சரிவால் மூன்று வீடுகள் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் 4 பேர்வரை காயமடைந்தனர்.

இவர்கள் கண்டி, போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பபட்டுள்ளனர்.

இந்த மண்சரிவு காரணமாகச் சுமார் 150 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

# இந்திய அணிக்கு சிறந்த வேகப்பந்து வீச்சாளர் தேவை

## அணித் தலைவர் கங்கூலி கூறுகிறார்


கங்கூலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்ரேலியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது. அவுஸ்ரேலியாவுடனான டெஸ்ட் தொடரைச் சமன்செய்த இந்திய அணி தற்போது மூன்று நாடுகள் பங்கேற்கும் போட்டியில் விளையாடிவருகிறது.

வீரர்களின் காயத்தால் இந்திய அணி பந்து வீச்சில் தடுமாற்றம் அடைந்துள்ளது. வேகப்பந்துவீச்சாளர் சகீர்கான், சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் ஆகியோர் காயம் காரணமாக 3 நாடுகள் போட்டியில் விளையாடவில்லை.

இந்திய அணி பந்து வீச்சில் பலவீனமடைந்து இருப்பதால் சிறந்த வேகப்பந்து வீச்சாளர் தேவை என்று கங்கூலி கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவுஸ்ரேலியாவில் விளையாடிவரும் இந்திய அணியில் அகர்கர், கும்ளே, ஆகியோர் மட்டுமே சிறப்பாகப் பந்துவீசி வருகிறார்கள்.

போட்டியில் நெஹ்றாவின் பந்து வீச்சு எடுபடாததால் அவுஸ்ரேலியாவுக்கு எதிராக கடந்த 9 ஆம் திகதி நடந்த ஒரு நாள் போட்டியில் 11 பேர் கொண்ட அணியில் அவர் சேர்க்கப்படவில்லை. பாலாஜி, இர்பான் பதானின் பந்து வீச்சும் அவ்வளவு திருப்தியாக இல்லை. அவுஸ்ரேலியாவுக்கு எதிராக பாலாஜி 57, பதான் 60 ஓட்டங்களையும் விட்டுக்கொடுத்தனர்.



இதே போல் சஞ்சய் பங்கரின் பந்து வீச்சும் எடுபடவில்லை. 9 ஆம் திகதி நடந்த போட்டியில் அவர் கங்கூலியை தேவையில்லாமல் ரன் அவுட் செய்து விட்டார். இதனால் பங்கர்மீது கங்கூலி நம்பிக்கை இழந்து விட்டார். வேகப்பந்து வீச்சை பலப்படுத்தும் வகையில் 17 வது வீரராக அமீத் பண்டாரி சேர்க்கப்பட்டுள்ளார். அவர் விரைவில் அவுஸ்ரேலியா செல்லவுள்ளார்.

## வெங்கடேஷ் பிரசாத் பயிற்சியாளராகத் தெரிவு



17 வயதுக்குட்பட்டவருக்கான ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டி விசாகப்பட்டினம், பெங்களூர், சென்னை, ஹைதராபாத் ஆகிய நகரங்களில் இந்த மாதம் நடைபெறுகிறது.

இதில் இந்தியா, பாகிஸ்தான், மலேசியா, ஆப்கானிஸ்தான், ஈராக், ஹொங்ஹொங் உட்பட 21 அணிகள் பங்கேற்கின்றன.

இந்தப் போட்டிக்கான இந்திய அணிப் பயிற்சியாளராக பெங்களூரைச் சேர்ந்த முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் வெங்கடேஷ் பிரசாத் நியமிக்கப்பட்டுள்ளார். இதை இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்தது. ஆந்திராவை சேர்ந்த பிரதீப் 17 வயதுக்குட்பட்ட இந்திய அணிக்கு அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## 2 ஆவது சுற்றில் ஆனந்த் வெற்றி!



ஹொலண்ட் நாட்டில் முன்னணி வீரர்கள் பங்கேற்கும் செஸ் போட்டி நடைபெற்று வருகிறது. முதல் சுற்றில் சமநிலை செய்த ஆனந்த் 2 ஆவது சுற்றில் ஆர்மோனியாவைச் சேர்ந்த விளாடிமிர் அகோபியனை எதிர்கொண்டார். இதில் ஆனந்த் வெள்ளை நிற காய்களுடன் விளையாடினார். 45 ஆவது காய்நகர்த்தலுக்குப் பிறகு ஆனந்த் வெற்றி பெற்றார். இதன் மூலம் அவர் 1.5 புள்ளிகள் பெற்று முன்னிலையில் உள்ளார்.

மற்ற ஆட்டங்களில் லிகோ (ஹங்கேரி) கிராம்னிக் (ரஷ்யா) ஆகியோர் வெற்றிபெற்றனர்.

# சென்னையில் நடந்த ரெனிஸ் போட்டியில் ஸ்பெயின் வீரர் கிண்ணத்தை வென்றார்!



கார்லோஸ்மோயா (தொப்பியுடன் நிற்பவர்) சம்பியன் கோப்பையுடன் நிற்பதையும், இறுதி ஆட்டத்தில் போராடித் தோற்ற நடப்பு சம்பியன் ஸ்ரீசப்பான் அருகில் நிற்பதையும் காணலாம்.

சென்னையில் நடந்துவந்த சர்வதேச வீரர்கள் பங்கேற்ற ரெனிஸ் போட்டியில் ஸ்பெயின் வீரர் - கார்லோஸ்மோயா சம்பியன் கிண்ணத்தை வென்றார்.

சர்வதேச வீரர்கள் பலரும் கலந்துகொண்ட இந்திய ஓபன் ரெனிஸ் பந்தயம், சென்னை நுங்கம்பாக்கம் மைதானத்தில் கடந்த சில நாட்களாக நடந்தது. சம்பியன் கிண்ணத்துக்கான இறுதி ஆட்டத்தில் ஸ்பெயின் வீரர் கார்லோஸ்மோயா மற்றும் தாய்லாந்தின் ஸ்ரீசப்பான் ஆகியோர் மோதினார்கள். சமதரத்தில் காணப்பட்ட இந்த வீரர்கள் இருவரும் அடுத்தடுத்து புள்ளிகளைக் குவித்து ரசிகர்களை உற்சாகப்படுத்தினர்.

முதல் செட்டை மோயாவும், 2 ஆவது செட்டை ஸ்ரீசப்பானும் கைப்பற்றியதால் 3 ஆவது மற்றும் கடைசி செட் அதிக பரபரப்பை உண்டாக்கியது. கடைசி செட் முழுவதும் ஆதிக்கம் செய்த ஸ்ரீசப்பான் கடைசியில் செய்த சில தவறுகளால் 6-6 என்ற சமநிலையில் ஆட்டம் நீடித்தது. ஒருங்கிணைந்த நினைவுடன் ஆடிய மோயா 7-5 என்ற புள்ளியில் டை - பிரேக்கரில் வெற்றிபெற்றார். இதையடுத்து மோயா 6-4 , 3-6, 7-6 என்ற செட்டில் வெற்றிபெற்று முதல் முறையாக சென்னை போட்டியில் சம்பியன் கிண்ணத்தை வென்றார்.

கடந்த 1999 மற்றும் 2000 ஆகிய ஆண்டுகளில் நடந்த போட்டியிலும் மோயா கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. நடப்பு சம்பியனான ஸ்ரீசப்பான் சென்னை ரசிகர்களுக்கு அதிகப்படியான உற்சாகத்தைக் கொடுத்தபோதும் அவர் தோல்வியையே தழுவினார். சம்பியன் கிண்ணததை வென்ற மோயா ரூ 22 லடசம் பரிசுத் தொகையை வென்றார்.

# கேணல் கிட்டு வெற்றிக்கேடய அரையிறுதி ஆட்டங்கள் இன்று

கிளிநொச்சி பொதுமைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கேணல் கிட்டு உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி - அரை இறுதி போட்டிகளுக்கான கட்டத்தை அடைந்துள்ளது. உதைபந்தாட்ட ரசிகர்களின் மிகுந்த ஆதரவுடன் பரபரப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்தச் சுற்றுப்போட்டியின் அரை இறுதி ஆட்டங்கள் கிளிநொச்சி பொது மைதானத்தில் இன்றைய தினம் நடைபெறவுள்ளன.

இந்த வரிசையில் முதலாவது அரை இறுதியாட்டம் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த யங்கென்றீசியன்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் வவுனியா மாவட்ட மருதநிலா விளையாட்டுக் கழகத்திற்கும் இடையில் காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. இரண்டாவது அரை இறுதியாட்டம் கிளிநொச்சி சந்திரோதயா விளையாட்டுக்கழகத்திற்கும், முல்லைத்தீவு விக்னேஸ்வரா அணிக்கும் இடையில் மாலை 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்விரண்டு போட்டிகளிலும் வெற்றிபெறும் அணிகள் இறுதிப்போட்டியில் 14 ஆம் திகதியன்று சந்திப்பார்கள்.

# இந்திய - அவுஸ்ரேலிய அணிகள் ஹொக்கி போட்டியில் இன்று மோதல்

இந்தியா, ஜேர்மனி, மலேசியா, பாகிஸ்தான், ஸ்பெயின், கொரியா, அவுஸ்ரேலியா ஆகிய 7 நாடுகள் பங்கேற்ற ஹொக்கிப்போட்டி கோலாலம்பூரில் நடைபெற்றுவருகிறது.

இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் ஜேர்மனியிடம் 1-3 என்ற கணக்கிலும், இரண்டாவது ஆட்டத்தில் 2-3 என்ற கணக்கில் பாகிஸ்தானிடமும் தோற்றது. நேற்றைய மூன்றாவது ஆட்டத்தில் இந்திய அணி மலேசியாவை எதிர்கொண்டது. இந்த ஆட்டம் 2-2 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிந்தது. மற்ற ஆட்டங்களில் பாகிஸ்தான் 4-2 என்ற கணக்கில் ஸ்பெயினையும், ஜேர்மனி 2-1 என்ற கணக்கில் கொரியாவையும் தோற்கடித்தன.

இந்தய அணி 4வது "லீக்" ஆட்டத்தில் அவுஸ்ரேலியாவை இன்று எதிர்கொள்கிறது. இதுவரை ஒரு ஆட்டத்தில் கூட வெற்றிபெறாத நிலையில் தன்ராஜ் பிள்ளை தலைமையிலான இந்திய அணிக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

# இந்திய நாடாளுமன்றத்துக்கு ஏப்ரலில் தேர்தல் நடைபெறும்

## பா.ஜ.க.மாநாட்டில் வாஜ்பாய் அறிவிப்பு



பாரதீய ஜனதா செயற்குழுக் கூட்டத்தில், நாடாளுமன்றத்திற்கு முன்கூட்டியே தேர்தல் நடத்த தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்ட பிரதமர் வாஜ்பாய் உடனடியாக தேர்தல் அறிவிப்பையும் வெளியிட்டார்.

ஏப்ரல் - மே மாதங்களில் தேர்தல் நடைபெறும் என்று அவர் கூறினார். இந்தத் தகவலை பாரதீய ஜனதா பொதுச்செயலாளர் அப்பாஸ் நக்வி உறுதிசெய்தார். அவர் நிருபர்களிடம் கூறுகையில் -

நாடாளுமன்றத் தேர்தல் ஏப்ரல் - மே மாதங்களில் நடந்தால் மிகவும் நல்லது என்று கூறினார்.

தேர்தல் குறித்து பா.ஜ.க. செயற்குழுவில் பிரதமர் வாஜ்பாய் பேசுகையில் - "இறுதிப் போருக்குத் தயாராகுங்கள் வெற்றிபெற்ற பிறகே நாம் ஓய்வெடுக்கவேண்டும் தேர்தலில் பா.ஜ.க.நிச்சயம் வெற்றிபெறும்" என்றார்.

பாரதீய ஜனதா தேசிய கவுன்சில் கூட்டம் 8 அல்லது 10 ஆம் திகதி நடைபெறும் என்று கூறிய அவர், அதில் பா.ஜ.க.வின் புதிய தலைவர் தேர்வு செய்யப்படுவார் என்றார்.

முன்னதாக செயற்குழுவில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்தில் செப்ரெம்பர் மாதம் நாட்டில் சில பகுதிகளில் மழை தொடங்கிவிடும் என்பதால் தேர்தல் நடத்த அது ஏற்ற தருணம் அல்ல. எனவே, நாடாளுமன்றத்துக்கு முன்கூட்டியே தேர்தல் நடத்துவது அவசியம் என்று விளக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில் இடைக்கால பட்ஜெட் தாக்கல் செய்யவும், செலவுக்கு அனுமதிகோரும் கணக்கைத் தாக்கல் செய்யவும் மற்றொரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது. இதை பிரதமர் வாஜ்பாய் ஏற்றுக்கொண்டார்.

நாடாளுமன்றத் தேர்தலையும் வெங்கையா நாயுடு தலைமையில் சந்திக்க நேற்றுத் தனித தீர்மானம் கொண்டுவரப்பட்டது. வெங்கையா நாயுடு தலைமையிலான குழு அதிஷ்டம், ஆற்றல், ஆவேசம் நிறைந்த ராசியான குழு என்பதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தீர்மானத்தில் கூறப்பட்டிருந்தது. அனைத்து மாநிலங்களிலும் பொங்கல் முதல் 15 தலைவர்கள் குழு ஒருமாத அதிரடிப பிரசாரத்தை தொடக்கி நடத்தவேண்டும். அந்தக் குழுவினர் பாரதீய ஜனதா அரசின் சாதனைகளை மக்களிடம் விளக்கிச் சொல்ல வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# பொடாவின்கீழ் தடுத்துவைக்கப்பட்டிருந்த 8 ம.தி.மு.கவினர் பிணையில் விடுதலை

## சென்னை உயர்நீதிமன்று தீர்ப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசியதாக பொடா சட்டத்தின் கீழ் கைதாகி சிறைவைக்கப்பட்டிருந்த 8 ம.தி.மு.க.வினர் நேற்று பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

மதுரை திருமங்கலத்தில் கடந்த 2002 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதி ம.தி.மு.க பொதுக்கூட்டம் நடந்தது.

அதில், ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ கலந்துகொண்டு பேசினார். தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஆதரித்து அந்தக்கூடட்டத்தில் ம.தி.மு.கவினர் பேசியதாக குற்றம் சுமத்தப்பட்டது.

திருமங்கலப் பொதுக்கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்த மற்றும் பேசிய 8 ம.தி.மு.கவினர்மீது பொலிஸார் வழக்குப்பதிவு செய்தனர். இதையடுத்து ம.தி.மு.க நிர்வாகிகள் ஈரோடு கணேசமூர்த்தி, மதுரைக்கணேசன், அழகுசுந்தரம், வீர.இளவரசன், பூமிநாதன், பி.எஸ்.மணியன், புலவர் செவந்தியப்பன். நாகராஜன், ஆகிய 8 பேரும் பொடா சட்டத்தில் கைதாகினர்.

அவர்கள் கைதான 2 நாள் கழித்து வைகோ கைதானார். வேலூர் சிறையில் அடைக்கப்பட்ட அவர்கள் மீது பூந்தமல்லி சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை நடந்து வருகிறது.

பொடா நீதிமன்றில் வைகோ தவிர 8 ம.தி.மு.க நிர்வாகிகளும் பிணைகோரி மனுத்தாக்கல் செய்தனர். அதை பொடா நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இதைத் தொடர்ந்து அவர்கள் 8 பேரும் சென்னை உயர்நீதிமன்றில் மேன் முறை யீடு செய்தனர். இந்த நிலையில் பொடா சட்டத்தில் உள்ள கடுமையான பிரிவுகள் சற்று தளர்த்தப்பட்டது.

பொடா சட்டம் குறித்து கருத்து தெரிவித்த உயர்நீதிமன்றம், தீவிரவாத இயக்கத்துக்கு ஆதரவு காட்டுவது என்பது பொடா சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவுக்கு வராது என்று கூறியது. அதன் அடிப்படையில் ம.தி.மு.க சட்டத்தரணிகள் வாதாடினர். கடந்த 6 ஆம் திகதி இந்த வழக்கில் இரு தரப்பு சட்டத்தரணிகள் வாதம் நடந்து முடிந்தது. இதையடுத்து நீதிபதிகள் தீர்ப்பை ஒத்திவைத்தனர்.

8 ம.தி.மு.கவினர் வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. நீதிபதிகள் பி.டி.தினகர், டி.நாகப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வு நீதிமன்று - 8 ம.தி.மு.கவினரையும் பிணையில் விடுதலை செய்ய உத்தரவிட்டது. 8 ம.தி.மு.கவினருக்கும் நீதிபதிகள் 8 நிபந்தனை விதித்துள்ளனர். அதன் விபரம் வருமாறு.

8 ம.தி.மு.க.வினரும் பொதுக்கூட்டங்களில் பேசலாம். ஆனால் வழக்கு பற்றியோ, விடுதலைப் புலிகள் பற்றியோ பேசக்கூடாது, 8பேரும் தாங்கள் தங்கி இருக்கும் இடத்தை தெரிவிக்கவேண்டும், வழக்கு விசாரணையின் போது நீதிமன்றில் தவறாது ஆஜராகவேண்டும். 50 ஆயிரத்துக்கு சொந்தப்பிணையும் அதே தொகைக்கு இரு நபர் பிணையும் பெற்று இவர்கள் விடுதலையாகலாம், வழக்கு தொடர்பான சாட்சிகளை சந்திக்கவோ, சாட்சியத்தை கலைக்கவோகூடாது, விடுதலைப்புலிகள் ஆதரவு நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது, விடுதலைப் புலிகள் பற்றி பத்திரிகைகளுக்கோ, தொலைக்காட்சிக்கோ அல்லது அறிக்கையோ கொடுக்ககூடாது, 8 பேரிடம் கடவுச்சீட்டு இருந்தால் அதை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவும். இவ்வாறு நீதிபதிகள் தெரிவித்தார்கள்.

இதையடுத்து, இந்த வழக்கை விரைந்து முடிக்க பூந்தமல்லி நீதிமன்றுக்கு உத்தரவிட வேண்டும் என்று அரசு தரப்பில் கோரிக்கை விடப்பட்டது. அதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் ஜூன் மாதத்துக்குள் வழக்கை நடத்தி முடிக்க உத்தரவிட்டனர்.

# இளைஞர்களின் பொறுப்பற்ற தன்மையால் சமூகத்தில் வேண்டத்தகாத பிரச்சினைகள்!

## வடமராட்சி கல்விக்கழக பொறுப்பாளர்

(வடமராட்சி)

சமூகத்தின் முன்னோடிகளாகத் திகழவேண்டிய இளைஞர்கள்- சமூகப்பொறுப்புக்களை மறந்து பொறுப்பற்றமுறையில் வீதிகளில் அலைவதனால், சமூகம் பல வேண்டத்தகாத பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய அவலநிலைகள் ஏற்பட்டுள்ளன என கல்விக் கழகப் பொறுப்பாளர் கே.தாயகன் தெரிவித்தார்.

மேற்குப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய 55 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் -

இளைஞர்கள் சமூகப்பொறுப்புக்களை உணர்ந்து செயற்பட்டால், இன்றைய பலபிரச்சினைகளுக்கு தீர்வுகாணமுடியும். இளைஞர்களை நல்வழிப்படுத்திச் சமூகப்பொறுப்புள்ள பிரஜைகளாக உருவாக்குவதில் சனசமூக நிலையங்களின் பங்களிப்பு மிக முக்கியமானவையாகும்.

சனசமூக நிலையங்கள் கிராமிய விழுமியங்களின் அடையாளங்களாகும். கிராமியக் கல்வி, கலை, கலாசாரம், விளையாட்டு, பொருளாதார அபிவிருத்தி, தலைமைத்துவம் போன்ற விழுமியங்களின் தரங்களுக்கும் சிறந்த சாதனங்களாக அமையும். இன்று சனசமூக நிலையங்களில் இளைஞர்களைக் காண முடியாதுள்ளது.

மக்கள் இன்று சனசமூக நிலையங்களை நாடிச்செல்வது மிகக் குறைவாக இருப்பது கவலைக்குரியதாகும். மக்கள் மத்தியில் வாசிப்பு பழக்கம் குறைவடைகின்றது. இதனால், உலகவிடயங்களை அறிய முடியாமல் போகின்றது.

இளைஞர்களை நல்வழிப்படுத்தும் செயற்பாடுகளோடு, கல்வி மேம்பாட்டு நடவடிக்கைகள், முன்பள்ளி அபிவிருத்தித் திட்டங்கள் விளையாட்டுதுறை, பொருளாதாரத்துறை அபிவிருத்திகள், தமிழீழ எழுச்சி நடவடிக்கைகள் என்பவற்றிலும் முக்கியமாகச் செயற்பட்டு வெற்றிகாணவேண்டும்.

சனசமூக நிலையங்களில் சிறந்த செயற்பாடுகளை நாம் எதிர்பார்ப்பது, எதிர்காலத்தில் சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காகும் எனவும் அவர் தெரிவித்தார்.

# வெளிநாட்டுப் பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

திணைக்களங்கள், சபைகளில் பணியாற்றுவோருக்கு வெளிநாட்டுப் பயிற்சிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பொதுநிர்வாக அமைச்சினால் கோரப்படும் வெளிநாடுகளில் பயிற்சி பெறுவதற்கான இந்த விண்ணப்பங்களை - சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர், ஆய்வு உத்தியோகத்தர், தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஆகியோர் விண்ணப்பிக்கலாம்.

அண்மைக் காலங்களில் இந்தப் பயிற்சிநெறியில் பெருமளவானோர் அக்கறை காட்டுவதில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இணையத்தள முகவரியான W.W,W ERD, GOV. LK மூலம் மேலதிக விபரங்களைப் பெறுவதுடன், நிதி அமைச்சினால் திணைக்களத் தலைவர்களுக்குச் சுற்று நிருபங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் அறியமுடிகிறது.

தகுதியானவர்கள் விண்ணப்பங்களை உரிய காலத்துக்குள் அனுப்பி ஒத்துழைக்கும்படி உள்ளூராட்சி திணைக்கள வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் கேட்டுள்ளார்.

# இணுவில் கிராம முன்னேற்ற சங்கத்திற்கு புதிய நிர்வாகக்குழு தெரிவுசெய்யப்படும்


இணுவில் கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் பொதுக்கூட்டம்-தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறவுள்ளது. சங்க மண்டபத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறும் இந்தக் கூட்டத்தில், புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்படும்.

அதேவேளை, கிராம முன்னேற்றச் சங்கத்தின் தற்போதைய நிர்வாகத்தினரின் குறைகளைச் சுட்டிக் காட்டும் துண்டுப்பிரசுரமொன்றும் கிராமத்தின் முக்கிய இடங்கள் பலவற்றிலும் ஒட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. தற்போதைய தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோரது பெயர்களை குறிப்பிட்டு, அவர்களுக்கு எதிராகப் பல குற்றச்சாட்டுக்கள் இந்தத் துண்டுப் பிரசுரத்தில் குறிக்கப்பட்டுள்ளன.

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தால் வழங்கப்பட்ட ஐந்து இலட்சம் ரூபா கடனுதவி நிதியில் மோசடி செய்ததாகவும், அந்தக் கடனை மீளச் செலுத்தியவர்களுக்குப் பற்றுச்சீட்டு வழங்கப்படாமையால், கடன்பெற்றவர்கள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருப்பதாகவும் அந்தத் துண்டுப்பிரசுரத்தில் எழுதப்பட்டுள்ளது.

இதன் காரணமாகக் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக நிர்வாகக்குழுக்கூட்டம் நடைபெறவில்லையெனவும், ஒரே நிர்வாக சபையிலே தொடர்ந்தும் இயங்குவதாகவும் அந்தத் துண்டுப்பிரசுரத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதிய நிர்வாகசபை ஒன்றை தெரிவுசெய்யவேண்டிய அவசியம் உள்ளதால், இணுவில் கிழக்கு பகுதியைச் சேர்ந்த மக்களை தைப் பொங்கல் தினமன்று மாலை 4 மணிக்குக் கிராமமுன்னேற்றச் சங்க மண்டபத்தில் ஒன்றுகூடுமாறும் கேட்டகப்பட்டுள்ளது. (இ)



இலங்கை மின்சாரசபை யாழ்.அலுவலகத்தில் கடந்த 14 வருடங்களாக பொறியியலாளராகக் கடமையாற்றி, ஓய்வுபெறும் - எஸ்.வல்லிபுரத்தின் பாராட்டுவிழாவில் யாழ்.மின் அத்தியட்சகர், எஸ்.குகதாசன் - வல்லிபுரத்தை மாலை அணிவித்து வரவேற்பதையும், இந்தவிழாவில் கலந்துகொண்ட வடபிராந்திய மின்சாரசபை பிரதி பொது முகாமையாளர் எஸ்.முத்துரெத்தினத்தையும் காணலாம்.

## 6500 மாணவர்கள் பாடசாலைக்கு செல்வதில்லை

கிளிநொச்சி மாவட்டத்தில் 6500 மாணவர்கள் பாடசாலை செல்வதில்லை. இவர்கள் அனைவரையும் பாடசாலை செல்லவைக்க சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

அல்லிப்பளை சீ.சீ.த.க. பாடசாலை திறப்பு விழாவில் கலந்துகொண்ட பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் வைரமுத்து இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்- இந்தநிலை தொடருமாக இருந்தால், கிளிநொச்சி மாவட்ட கல்விநிலை வீழ்ச்சி அடையும் வாய்ப்பு இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (115)

## நினைவுதினம் அனுஷ்டிப்பு

பருத்தித்துறை யோகசாந்தி நிலையத்தால் 14 ஆம் திகதி புதன் கிழமை யோக ஆசான் செல்லத்துரை மாஸ்ரர் நினைவுதினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது. (17)

# இளைஞனின் சடலத்தை இனங்காண உதவுக

## வைத்தியசாலை வட்டாரம் கோரிக்கை

யாழ்.போதனாவைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி மரணமான இளைஞனின் உடலை இனங்காண உதவுமாறு யாழ். போதனா வைத்தியசாலை நிர்வாகம் கேட்டுள்ளது.

கடந்த 10 ஆம் திகதி சாவகச்சேரி கல்வயல் பகுதியிலுள்ள வீதி ஒன்றில் தலையில் சுடப்பட்டநிலையில் அநாதரவாகக் காணப்பட்ட இளைஞனின் உடலை, சாவகச்சேரி பொலிஸார் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்திருந்தனர்.

இந்தச் சடலம் 28 வயது மதிக்கத்தக்க திடகாத்திரமான இளைஞனது எனவும், வடபகுதியைச் சேர்ந்த ஒருவரது உடலாகவே இது இருக்க வாய்ப்பிருப்பதாகவும் யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத பரிசோதனை அறிக்கை தெரிவிக்கின்றது.

இந்த இளைஞனின் சடலத்தை இனங்காண்பதற்கான முயற்சியில் சாவகச்சேரி பொலிஸார் முயற்சிக்கின்றனர்.

இதற்குப் பொதுமக்களும் தமது ஒத்துழைப்பை வழங்கி இனம் காண உதவுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ப)

# நேபாளப் பத்திகையாளர் குழு இந்த மாதம் யாழ். வருகிறது!

(வண்ணை)

நோபாளப் பத்திரிக்கையாளர்கள் 15 பேர் அடங்கிய குழு - இந்த மாதம் 22 ஆம் திகதி யாழ்.வரவுள்ளது. யாழ்.வரவுள்ள இந்தக் குழுவினர் பஸ்தியன் விடுதியில் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கப் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளனர்.

நேபாளத்தில் இனவிடுதலை வேண்டிப் போராடும் அமைப்புக்களின் போராட்டத்துடன், இங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானித்து, ஒரு புத்தக வடிவில் அதனை வெளியிடுவதும் குழுவின் நோக்கங்களில் ஒன்று என கூறப்படுகின்றது. இதற்கான ஏற்பாடுகளைச் சுதந்திர ஊடகவியலாளர் சம்மேளனம் மேற்கொண்டுள்ளது. (111)

# கேணல் கிட்டுவின் நினைவாக போதனாவைத்தியசாலை சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர்களால், நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நல்லூர் கோட்ட அரசியற் துறையினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தச் சிரமதானத்தில்,பலர் கலந்துகொண்டு யாழ்.போதனா வைத்தியசாலையின் பல பகுதியிலும் காணப்பட்ட புல் பூண்டுகள், கற்கள் அகற்றப்பட்டதுடன், கழிவு நீர் கால்வாய்களும் சுத்தம் செய்யப்பட்டன.

இவற்றிற்கு யாழ்.மாநகரசபை உழவு இயந்திரங்கள், மற்றும் உபகரணங்களையும் வழங்கி ஒத்துழைத்துள்ளது.

# போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்நிர்மாணப் பணிகள் குறித்து அரச அதிபர்களுடன் சந்திப்பு

(கிளிநொச்சி)

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும் வழிவகைகள் குறித்து, மாவட்ட அரச அதிபர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே கிளிநொச்சியில் நேற்று முன்தினம் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த அரச அதிபர்களும், விடுதலைப் புலிகளின் பொதுநிர்வாக நடுவப் பணியகத்தின் பொறுப்பாளர், பூவண்ணனும், பல முக்கியஸ்தர்களும் அந்தக் கூட்டத்தில் பங்குபற்றினர்.

2004, 2005, 2006 ஆம் ஆண்டுகளில் வட பகுதியில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வு, புனரமைப்பு அபிவிருத்திப் பணிகள் குறித்து - தமது திட்டங்கள், ஆலோசனைகளை விடுதலைப் புலிகள் இந்தக் கூட்டத்தில் அரசாங்க அதிகாரிகளுக்கு விளக்கமளித்தனர்.

இதேபோன்று வவுனியா மாவட்டத்துக்கான திட்டங்கள் குறித்து முதன்முறையாக கடந்த சனிக்கிழமை ஆராயப்பட்டது.

விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் மற்றும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் திட்டப்பணிப்பாளர் லோரன்ஸ் திலகர், அரச அதிகாரிகள் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## எழுவைதீவு

# உபதபாலகத் தொலைபேசி 6 மாத காலமாக சீரின்மை

எழுவைதீவு உபதபாலகத்திற்கான தொலைபேசி வசதி சீரின்மையால், கடமைகளைச் செய்வதில்பெரும் சிரமம் ஏற்பட்டுவருவதாக யாழ் பிரதம அஞ்சல் அலுவலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஆறுமாத காலமாக எழுவைதீவு உபதபாலகத் தொலைபேசிக்கான மின்கலம் பழுதடைந்தநிலையில் காணப்படுவதால், அங்கு தொலைபேசிச் சேவை ஒழுங்கற்றிருப்பதாகவும், இது குறித்து யாழ். ரெலிகொம் நிறுவனத்திற்குத் தகவல் வழங்கியும், அவர்கள் எந்தவித நடவடிக்கையையும் மேற்கொள்ளாதிருப்பது கவலையளிப்பதாகவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ப)

## பொங்கல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்தில் - வரும் பொங்கல் தினத்தை முன்னிட்டு, நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. அன்று மாலை நிலைய ஆண்டுப் பொதுக் கூட்டமும் இடம்பெறவுள்ளது. (111)

## 25 இலட்சம் ரூபா காணி அன்பளிப்பு

(வடமராட்சி)

வல்வெட்டித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு, கனகராஜா கருணாகரன் தம்பதிகள் 25 இலட்சம் ரூபா பெறுமதியான காணியை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இந்தக் காணியை மாவட்ட வைத்திய அதிகாரி க.மயிலேறும் பெருமாள் டெ றுப்பேற்றுக்கொண்டார். (17)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள் 1 முதலாவது அகவையில்



பெயர் : செ.சதுஜா
முகவரி : இடைக்குறிச்சி, கரவெட்டி.




# பெரிய தோல்வி



ஐரோப்பியாவில் பிரான்சின் மேற்பார்வையில் தயாரிக்கப்பட்ட சூரியக்கலம் - தனது முதலாவது விண்ணிற்கான பயணத்தின்போது, ஒழுங்காகச் செயற்படவில்லை. இதனால், அதன் தோல்விக்கான காரணத்தை ஆராய்வதில் விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

2002 டிசம்பர் மாதம் ஐரோப்பாவினால் அனுப்பபட்டிருந்த சூரியகலம் வெற்றியடைந்தால் மேலும் வால் நட்சத்திரத்துக்கு அனுப்புவதற்கும் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்து. இந்தத் திட்டத்திற்கு மீண்டும் பணத்தை வழங்குவதற்குப் பல ஸ்தாபனங்கள் முன்வந்துள்ளன.

# திரை விமர்சனம்


## கோவில்



இது ஒரு மத நல்லிணக்கத்துக்கான கதை. புளியங்குளத்தைச் சேர்ந்த சிம்பு - வேம்பங்குளத்துச் சோனியா அகர்வாலைக் காதலிக்கின்றார். சிம்பு விபூதி அணிபவர். அதேபோல சோனியா சிலுவை. பிரச்சினை இது மட்டுமா? இரண்டு ஊர்களுக்கும் ஜென்மப்பகை. மகளின் காதலைத் தடுக்கின்றார் அப்பா நாசர். இது வெற்றியா? தோல்வியா? என்பதே படம். படத்தின் இயக்குநர் ஹரி. எண்ணெய் வழியும் முகத்துடன் சோனியா அகர்வால். மழைக்காகக்கூட பிள்ளையார் கோவிலில் ஒதுங்க நினைக்காத மதவாத நாசர் - கீதையும், குர்ஆனும், பைபிளும் ஒன்றுதான் என்றுகூறும் ராஜ்கிரன், ராஜேஷ்... இப்படி நேர்த்தியான பாத்திரப்படைப்புக்கள். படத்தில் வளவளா, தொள தொளாக்களை நிறைவாககுகிறார் வடிவேலு. வடிவேலு இம்முறை மிருகங்களை வைத்து நகைச்சுவை பண்ணநினைக்கிறார். இது அவ்வளவாக எடுபடவில்லை. ஹரிஸ் ஜெயராஜின் இசையில் பாடல்கள் அற்புதம். குறிப்பாக வேப்பங்குளத்து வெயிலே... அலரிவிதையில் முளைச்ச துளசிச் செடியே... பாடலாசிரியர் சிநேகனுக்கு ஒரு பாராட்டு . அவங்க கிணத்துத்தண்ணி, நாம ஆத்துத்தண்ணி. அது அங்கங்கேதான் இருக்கணும் எனறுகூறும் நாசர் - எல்லாத்தண்ணியும் அந்த ஆண்டவன் கொடுத்த மழைதான் என்றுகூறும் ராஜ்கிரன் வசனங்களில் எல்லாம் மத இடியிடிக்கின்றது. 50 வீதம் அலைகள் ஓய்வதில்லை. 50 வீதம் காதலுக்கு மரியாதை. இரண்டையும் கலந்து ஒரு கோவில் கட்டியிருக்கிறார் இயக்குநர் ஹரி. இந்தக் கோயிலுக்கு மக்கள் கூட்டம் வராது.

- PNS-

# நவீன மருத்துவத்துக்கு டாட்டா



மூலிகை மருத்துவத்துக்கு உலகில் அதிகரித்துவரும் செல்வாக்குக் காரணமாக - 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மருத்துவமூலிகைக் குணங்கள்கொண்ட தாவரங்கள் அழிந்து வருவதாக, உலக உயிரியல் நிலையம் தெரிவித்துள்ளது.

ஐரோப்பிய நாடுகளில் 1300 இற்கு மேற்பட்ட மருத்துவக் குணங்கொண்ட தாவரங்கள் பாவனையில் உள்ளன. இவற்றில் 90 வீதமானவை காடுகளில் இருந்தே பெறப்பட்டுவருகின்றன. இதனிடையே பியர்பெரி (BEAR BERRY) எனப்படும் சிறுநீரகம், அஜீரணம் (DIGESTIVE) தொடர்பான நோய்களுக்கு பாவிககப்படும் தாவரங்களை - தற்சமயம் காடுகளில் காண்பதே அரிதாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படு கிறது.

உண்மையில் இந்தத் தாவரத்தின் வேர்பகுதியே பாவனைக்குத் தேவைப்படுகிறது. அதனால், முழுத்தாவரமும் வேருடன் பிடுங்கி எடுக்கப்படுகிறது.

மேலும், 'ரெழுலக்கா' எனப்படும் தாவரம் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் புற்றுநோய்க்கெதிரான மருந்து தயாரிப்புக்கும் பாவிக்கப்படுகிறது.

இதனிடையே ஐரோப்பா, வடஅமெரிக்கா ஆகிய நாடுகளில், மூலிகை மருந்துகளுக்குரிய தேவை (HERBAL MEDICINE) கடந்த 10 ஆண்டுகளில் 10 வீதம் அதிகரித்துள்ளது.

# முகம் மாறுமா?



சிக்கலான முக அறுவைச் சிகிச்சைகளை (facial surgery)மேற்கொண்டபின், முகத்தில் எவ்விதமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கும் என்பதை முன்னரே அந்த நோயாளி அறியக்கூடிய வாய்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது.

அமெரிக்காவிலுள்ள பெண்கள் வைத்தியசாலை - இந்த வகையான உபகரணமொன்றைப் புதிதாகக் கண்டுபிடித்துள்ளது. தோலில் காணப்படும் படைகளை (LAYERS) நன்கு ஆராய்வதன்மூலம், எவ்வாறு சத்திரசிகிச்சையின் முடிவு அமையப்போகின்றதென அறியக்கூடியதாகவுள்ளது. சினிமாப் படங்களிலும் விசேடவிளைவுகளை (SPECIAL EFFECT) கதாபாத்திரங்களின் முகங்களை மாற்றியமைப்தற்கும் இவை உதவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மேலும் உடலில் எந்தப்பகுதியில் வயது முதிர்ந்த தோல் காணப்படுகின்றது என்பதையும், அறுவைச்சிகிச்சையின் பின் ஏற்படும் மாற்றத்தையும் முன்னரே அறியமுடியும் எனவும் தெரிவிக்கின்றது.

# ஈ. மெயில் தாக்கம்



கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு எல்லோரும் ஒரேநேரத்தில் விமானப் பயணச்சீட்டுகளைப் பதிவு செய்யமுயன்றபொழுது, அங்கே கணினி E-mail இல் குழப்பம் ஏற்பட்டிருந்தது. அதிலும் விமானத்தின் ஆரம்பப் பயணம் மற்றும் விமானத்தின் தரையிறக்கம் போன்றவற்றிலும் பெரும்பாலான குழறுபடிகள் ஏற்பட்டன. அங்கே BMI விமானம், LUFTHANSA ஆகிய விமானங்கள் பெரும்பாலும் கணினிமுறைமூலம் கட்டுப்படுத்தப்படுவதனால், அவற்றின் பறப்புகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன.

இதன்காரணமாக மக்கள் நீண்டநேரம் காத்திருந்தார்கள். ஆனால், தெய்வாதீனமாக எந்தவிதமான விமான விபத்துக்களும் இடம்பெறவில்லை. நிலைமையைப் புரிந்துகொண்ட விமான நிலையங்களின் கட்டுப்பாட்டாளர்கள் - தங்களால் முடிந்தவரை விமானப் பறப்புகளைக் கட்டுப்படுத்தியிருந்தார்கள்.

பெரும்பாலான பயணிகள் தங்களுடைய கிறிஸ்மஸ் பண்டிகையை விமானத்திலேயே கொண்டாடினார்கள்.

எந்தளவுக்குக் கணினிமுறை வளர்ந்தாலும், இதன்மூலம் வருகின்ற நெருக்கடிகளுக்கு தீர்வு என்பது மனிதர்களால் செய்யப்படுகின்ற நடவடிக்கைதான்.

# நிறைய எலும்புக்கூடுகள்



17 ஆயிரத்துக்கு மேற்பட்ட மனித எலும்புக்கூடுகளை (SKE LETONS) புதைத்து விடுவதற்கு, பிரித்தானியாவின் அருங்காட்சியகம் தீர்மானித்துள்ளது. சமய நம்பிக்கைகள் காரணமாக இவற்றை புகைப்பதற்கு முன்வந்துள்ளது.

கடந்த 30 ஆண்டுகளாக இவை சேகரிக்கப்பட்டு வந்துள்ளன. மதத் தலைவர்கள் இந்த எலும்புக்கூடுகள் உரிய சமய அனுஷ்டானங்களின் பின், புதைக்கப்படவேண்டும் என அருங்காட்சியகத்தைக் கேட்டுள்ளனர். ஆனால், மானிடவியல் (ANTHOROPOLOGY) அறிஞர்கள் - இந்த எலும்புக்கூடுகள் தொடர்ந்து பாதுகாக்கப்படுதல்வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்கள். மேலும் இந்த எலும்புக்கூடுகள் சரித்திரம், சமூகவியல், மருத்துவம் தொடர்பான ஆய்வுகளுக்கு உதவியாக அமையலாமெனவும் தெரிவித்துள்ளனர்.


இந்த எலும்புக்கூடுகள் பழைய தேவாலய மடங்களின் அருகில் அமைந்த பிரதேசங்களில் கண்டெடுக்கப்பட்டிருந்தன. இதனால், இந்த எலும்புக்கூடுகளுக்கு கிறிஸ்தவமுறையின் சடங்குகளே செய்யப்படவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அருங்காட்சியகம் ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக்கணக்கான உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்துள்ளது.

# அழியும் மிருகங்கள்

சூழல் மாற்றத்தினால் கோடிக்கணக்கான உயிரினங்களை 2050 ஆம் ஆண்டளவில் அழிவின் விளிம்பிற்கு (EXTINCTION) கொண்டு செல்லலாம் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். இந்த உயிரினங்களைக் காப்பாற்றுவதற்கு வளிமண்டலத்தில் அதிகரித்துவரும் காபனீரொட்சைட்டின் அளவைக் கட்டுப்படுத்தவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






அத்துடன், ஐக்கியநாடுகள் சபையின் கணிப்பிலிருந்து தமது வாழ்விற்கு இயற்கையைச் சார்ந்துள்ள பல மில்லியன் மக்களுக்கு உயிர் பிழைத்துக்கொள்ளும் நிலைக்கு (SURVIVAL) ஆபத்து ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆய்விற்காக 6 மாறுபட்ட வளமான பகுதிகளை விஞ்ஞானிகள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

சிலவகையான உயிரினங்கள் தாம் வாழும் சூழலிற்கேற்ப தம்மை இசைவாக்கம் செய்யமுடியாதநிலையில் அழிந்து போகலாமெனவும், வேறு சில உயிரினங்கள் ஏற்ற, வாழும் சூழல் (HABITAT) உடைய பிரதேசங்களுக்கு நகர்ந்து செல்லமுடியாதநிலையில் அழிந்து போகலாமெனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

# புகைத்தலுக்கு தடை



புகைத்தலுக்கும், மார்புப் புற்றுநோய்க்கும் இடையே தொடர்புகள் அதிகரித்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

முன்னர் ஆய்வுகளில் மாறுபட்ட முடிவுகள் கிடைத்திருந்தன.

கலிபோர்னியாவில் 116 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பெண்களை ஆய்வில் ஈடுபடுத்தியிருந்தனர். குறிப்பாக புகைப்பிடிக்கும் பழக்கமுள்ள பெண்களையும், அந்தப் பழக்கம் இல்லாத பெண்களையும் தேர்ந்தெடுத்து ஆய்வினை மேற்கொண்டனர்.

மேலும், 30 வீதத்திற்கு மேற்பட்ட பெண்களிடையே புகைப்பிடிக்கும் பழக்கம் காணப்பட்டது.

20 வயதுக்கு முன் புகைத்தலை ஆரம்பித்த பெண்களும், முதலாவது மகப்பேற்றுக்கு (PREGNANCY) 5 ஆண்டுகளுக்கு முன் புகைத்தலை ஆரம்பித்தவர்களும், மார்பகப் புற்றுநோயால் அதிகம் பாதிக்கப்பட்டிருந்தார்கள்.

குழந்தைகளுக்கு பாலூட்டும் தாய் (BREAST FEEDING MOTHER) மார்பகப் புற்றுநோய்க்கு ஆளாவதில்லை என்ற கருத்து நிலவியபோதும், புகைப்பிடிக்கும் தாய்க்கு இது பொருத்தமற்றதெனவும் ஆய்வு தெரிவித்துள்ளது.

புகைத்தலின்போது, உள்ளிளுக்கப்படும் நஞ்சுகள் (TOXINS) - மார்பகத்தில் காணப்படும் கொழுப்புகளுடன் சேர்ந்து காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

மனித உடலில் எல்லா உறுப்புகளுமே புகைப்பிடித்தலினால் தாக்கத்துக்குள்ளாவதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

# HAND (குப்பை) போன்




பழைய வடிவமைப்புக்களைக் கொணடதும், பாவனைக்கு உதவாத கையடக்கதொலைபேசிகளும் கோடிக்கணக்காகக் கிறிஸ்மஸ் காலத்தில் எறியப்பட்டு வருகின்றன. இவற்றை வேறுபொருட்களாக மாற்றுவதற்கு எதுவித முயற்சிகளும் எடுக்கப்படுவதில்லை.

எறியப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளில் காணப்படும் நச்சுப்பொருட்கள் சூழலை மாசுபடுத்துகின்றது ( POLLUTE THE ENVIROMENT) என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தேவையற்ற கையடக்கத் தொலைபேசிகளை எறியும்போது அல்லது எரிக்கும்போது - வளிமண்டலத்தில் நச்சுவாயுக்களின் தாக்கம் அதிகரிக்கின்றன.

தற்போது பிரித்தானியாவில் இவற்றைச் சேகரித்து, மீண்டும் பாவனைக்கு உகந்ததாக மாற்றுவதற்கு அமைப்பு ஒன்று முன்வந்துள்ளது. இதன்மூலம் சூழல் மாசடைவதைக் குறைத்துக் கொள்ளமுடியுமென அந்த அமைப்பின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# சுறா ஆ::: ஆ



அந்தாட்டிக்காவில் காணப்படும் ஒருவகை சுறாமீன் (SHARK) - தனது பருமனைவிட பலமடங்கு பெரிய ஸ்குயிட் (SQUID) எனப்படும் கணவாய் இனத்தைச் சேர்ந்த உயிரினத்தை உணவாகக் கொள்கின்றது.


பிரான்ஸைச் சேர்ந்த கடல் ஆராய்ச்சியாளர் (MANNE BIOLOGIST) - இந்த வகையான உயிரினத்தை வெட்டி, அதன் உட்பாகத்தை ஆராய்ந்தபோது, அதன் வயிற்றிலிருந்து 49 ஸ்குயிட் எனப்படும் பிராணிகளைக் காண நேர்ந்தது.

ஸ்குயிட் எனப்படும் கடல்வாழ் உயிரினம் நீண்ட காலவமாகவே மர்மமாகவே கடலோடிகளுக்குத் தென்பட்டது.

இவற்றின் இயற்கைச் சூழல் இதுவரை ஆராயப்படவில்லை. காரணம் இந்த வகையான உயிரினம் - நீர்மூழ்கிக்கப்பல் ஒன்று கடல் பிரயாணம் செய்யும் ஆழத்திலும், கீழ் பாகத்தில் வாழ்ந்து வந்துள்ளது.

இந்த இனம் இறந்தபின் கரையொதுங்கும்போதே காணக்கூடியதாக இருந்தது. ஆனால், கடலின் அடியில் இறந்தபின்பே பெரிய சுறாக்கள் அவற்றை உண்ணுவதாக விஞ்ஞானிகள் கருத்து தெரிவித்துள்ளனர்.

# சந்திரனில் இந்திய மக்கள்



இந்திய ஜனாதிபதி டொக்டர் அப்துல்கலாம் - உள்நாட்டு விஞ்ஞானிகளைத் தமது பரிசோதனைகளையும், ஆற்றல்களையும் விண்வெளி தொடர்பான பரிசோதனைகளில் பயன்படுத்துமாறு தெரிவித்துள்ளார்.

2007 அல்லது 2008 ஆம் ஆண்டளவில் சந்திரயான் எனப்படும் திட்டத்தின்மூலம், மனிதர்கள் அற்ற கலமொன்றை சந்திரனுக்கு அனுப்புவதற்குத் திட்டமிட்டுள்ளனர்.


ஆசியப் பிரதேசத்திலுள்ள சில நாடுகள் ரொக்கட், செயற்கைக்கோள் தொடர்பான தொழில்நுட்பத்தில் முயற்சிகள் மேற்கொள்வதும் ஒரு காரணமாக இருக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற ஒக்ரோபர் மாதம் சீனா விண்வெளிக்கு மனிதனை அனுப்பியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

அரைத் தொன் நிறைகொண்ட இந்தியாவில் தயாரிக்கப்பட்ட விண்வெளிக்கலத்தை அனுப்புவதன்மூலம், உலக நாடுகளின் கவனத்தைத் திருப்புவதற்கும் இந்தியா முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விஞ்ஞான நோக்கங்களைவிட, அரசியல் நோக்கங்களே மேலோங்கியுள்ளதாகவும், உலகின் வளர்ந்த நாடுகளில் இந்தியாவும் ஒரு நாடாக 2020 இல் திகழவேண்டும் என்பதும் ஜனாதிபதியின் நோக்கமாகவுள்ளது.

# வாரம் ஒரு யோகாசனம்



## பஸ்தி

முதல் நிலையாகத் தரையில் உட்கார்ந்து கால்கள் இரண்டையும் நேராக நீட்டவேண்டும். கால்கட்டை விரல்களை கைகள் இரண்டினாலும் பிடிக்கவேண்டும். சற்றும் கால்கள் வளையக்கூடாது.

இது பசு மூத்தாசனம் போன்றது. ஆனால், இதில் தலையை முழங்காலில் முட்டத்தேவையில்லை. குடல் தசைகளைக் கீழும் மேலும் அசைக்கவேண்டும். ஆசன வாசலைச் சுருக்கவேண்டும். இரண்டு நிமிடம் செய்தால் போதுமானது.

### நன்மைகள்

பெருங்குடலில் இருக்கும் கழிவுப்பொருட்களை வெளியேற்றும். குடல் சுத்தம் செய்யப்படுகிறது. வயிறு சம்பந்தமான கோளாறுகள் குணமாகும். பெருந்தொத்தி, சிறுதொத்தி குறையும். வயிறு இறுகும், தூக்கத்தில் விந்து வெளியேறுவதைக் கட்டுப்படுத்தும், இளமையைக் காக்கும், பொறுமை உண்டாகும்.

சிறுவர்கள், கர்ப்பம்தரித்த தாய்மார்கள், குடல்புண் உள்ளவர்கள் இரத்த அழுத்தம் உள்ளவர்கள் இந்தப் பயிற்சியைச் செய்யக்கூடாது.

## செய்திக் கட்டுரை - சுதந்திரன்



# அரச பாடசாலைகள் தற்போது தனியார் மயமாகிவருகிறதா?

“நீ எவ்வளவு காசு கொடுத்தனி?, என்னட்டை இருபத்தையாயிரம் பிடுங்கிப் போட்டாங்கள், இதற்கு உரிய ஆக்களிட்டைச் சொல்லி சரியான நடவடிக்கை எடுக்க வேணும். மண்டபம் கட்டிறதுக்கு மண்பறிச்சு விட்டாம். கொப்பி, பேனையெல்லாம் வேண்டி பிள்ளையைப் பள்ளிக்கூடம் சேர்க்கவே முப்பதினாயிரம் முடிஞ்சுது.

- இந்த வசனங்களை தற்போது பரவலாக குடாநாட்டு மாணவர்களின் பெற்றோர்கள் பலரிடமிருந்து எதிர்பார்க்க முடிகிறது.

இவர்களின் இந்த வேதனைமிக்க வசனங்களுக்கெல்லாம் மூல காரணம்- பாடசாலைகள் பலவற்றிலும் அன்பளிப்பு என்ற பெயரில் வாங்கப்படும் இலஞ்சம்தான். புதுவருடம் பிறந்துவிட்டது. எங்கள் ஒவ்வொருவருக்கும் இந்த வருடம் ஆரம்பத்திலே நிறைவேற்ற வேண்டியதென பல கடமைகள் விரிந்து கிடக்கின்றன அதைப் போல,

**பிள்ளைகளை பள்ளிக்கூடத்திலே சேர்க்க வேண்டுமாக இருந்தால் பாடசாலை அபிவிருத்திக்கு என்ற பெயரில் அன்பளிப்பாக இலஞ்சம் கொடுக்க வேண்டும். அல்லாது போனால் அனுமதிமட்டுமல்ல மழைக்கு ஒதுங்கிநிற்கக்கூட இடம் இல்லை. இதுதான் குடாநாட்டு பாடசாலைகள், கல்லூரிகளின் இன்றைய நிலைமை.**

முன்பள்ளிக்குச் சென்று ஐந்து வயது முடிந்த பிள்ளையைப் பாடசாலையில் சேர்க்கவேண்டும், ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை எழுதிய பிள்ளையை உயர் கல்விக்காகக் கல்லூரியில் சேர்க்க வேண்டுமென, பெற்றோர்களுக்கு முன்னேயும் பெருஞ் சுமைகள் இருக்கின்றன. பிள்ளைகளை பள்ளிக்கூடத்தில் சேர்ப்பது சுமையா என நீங்கள் சிந்திக்கக்கூடும். தற்போதுள்ள சூழ்நிலையில் ஒரு போதுமே இந்த விடயம் சுகமாகப்படாது. சுமையாகவே அழுத்தும்.

பத்துவருடங்களுக்கு முன்னர் ஆயிரம் இரண்டாயிரம் ரூபாவை மேற்படாதிருந்த இந்த “அன்பளிப்புத் தொகை” இன்று இலட்சத்தைத் தொட்டுவிடுமோ எனும் அச்சம் எழுகின்றது. பாடசாலைகளால் கேட்கப்படும் தொகை சில பெற்றோர்களுக்கு சில்லறையாகத் தெரிந்தாலும் பல பெற்றோர்களுக்கு - மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தொண்டையை அடைக்கும் சுருக்குக் கயிறாகவே இருக்கிறது.


நாள் கூலிக்குப் போய், வயிறு நிரப்பும் அன்றாடம் காய்ச்சிகளின் பிள்ளைகள், கல்லூரிக் கனவுகளையே காணக்கூடாது என்பது இன்று எழுதப்படாத் சட்டங்களாக உருப்பெற்று வருகின்றன. என்னைப்போல் என் பிள்ளையும் கஷ்டப்படக்கூடாது. அவன் படித்து நல்ல உத்தியோகம் பார்க்க வேண்டுமென, சாதாரண ஒரு கூலித்தொழிலாளி கற்பனை பண்ணக்கூடிய உரிமையைக்கூட இன்று சிலர் பறித்துவிட்டார்கள்.

பாடசாலைகள் பலவும் இன்று ஏட்டிக்குப் போட்டியாக காணிகளை வாங்குவதும், கட்டடங்களை அமைப்பதிலும் கணனிகளை கொள்வனவு செய்வதுமென வலு பிசியாக இயங்கிக்கொண்டிருக்கின்றன. தமக்கிடையே கல்விசார்ந்த ரீதியில், பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் போட்டி போடுவதையெல்லாம் படிப்படியாக மூட்டை கட்டி வைத்துவிட்டு மாடிகளை அமைப்பதிலும் மைதானத்தை விஸ்தரிப்பதிலுமே குறியாகவுள்ளன. இவை தேவையற்றவையென நாம் சொல்லவில்லை ஆனால், இவற்றின் பெயரால் ஏழைப் பெற்றோரை வதைத்து அவர்களின் கனவுகளைச் சிதைத்துவிடக்கூடாது என்றே வலியுறுத்துகிறோம்.

“டொனேசன்” என அழகான பெயர் சூட்டப்பட்டுள்ள இந்த அன்பளிப்புத் தொகையைக் கட்டி முடிப்பதற்காக தாலியையும் அடகுவைக்கத் தயாராகத்தான் இருக்கிறாள் எங்கள் கிராமத்து அம்மா. தன் மகன் நாளையொரு வைத்தியனாகவோ, பொறியியலாளனாகவோ, எக்கவுண்டனாகவோ வரவேண்டுமென எண்ணும் யாழ்ப்பாண கனவுக் கலாச்சாரத்திற்குள் - அவளும், கட்டுண்டு போயிருக்கிறாள். எப்பாடுபட்டாவது யாரிடம் கடன்கேட்டாவது, நாலுநாள் சாப்பிடாமல் இருந்தாவது பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கேட்ட காசைக் கொடுத்தால்தான், தன் பிள்ளை நாளை பெரியவனாக உருவாகமுடியுமென எண்ணும் நிலைக்குப் பெற்றோரைத் தள்ளியிருக்கின்றன எங்கள் பாடசாலைச் சமூகங்கள்.

1930 களிலேயே இலங்கையில் இலவசக் கல்வி நடைமுறை, கன்னங்கராவால் அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டது. இன்று அவர் இருந்திருந்தால் அரச பாடசாலைகளின் நிலையைப் பார்த்துத் தற்கொலை செய்திருப்பார். தனியார் பாடசாலைகள் டொனேசன் கேட்பதைத் தவிர்க்கமுடியாத சூழ்நிலையில் ஏற்றுக் கொண்டாலும், அரச பாடசாலைகள் இலஞ்சம் கேட்பதை எந்த வகையிலே ஏற்றுக்கொள்ளமுடியும்.

மைதானம் வாங்குவதற்கும், கட்டடம் கட்டுவதற்கும் அரச நிதியில் இருந்து பணம் ஒதுக்கப்படும்போது, எதற்காக பெற்றோரின் கழுத்தைத் திருகுகிறார்களோ தெரியவில்லை. சரி அரசு வழங்கும் நிதி போதாது எனின், வசதியான பெற்றோரிடம், காசு கொடுத்து பிள்ளையை பள்ளியில் சேர்த்தால்தான் மரியாதையென எண்ணுபவர்களிடம் மட்டும் வாங்கலாம்தானே, அதை விடுத்து நாளைய வாழ்வையே கேள்விக்குறியோடு நோக்கும் பெற்றோரை வதைப்பது நியாயமா?



இது தொடர்பாக உரிய இடத்தில் முறையிடலாம்தானே என நீங்கள் எண்ணுவது எமக்குத் தெரிகிறது.

சில பெற்றோர் உரிய இடத்திற்குப் போனார்கள் - முறையிட்டார்கள். முறைப்பாட்டை எழுதித் தாருங்கள் என்றபோது தயங்கினார்கள். தமது முறைப்பாட்டால் தம் பிள்ளைக்கு அனுமதி கிடைக்காமற் போய்விடுமோ எனும் அச்சம் அவர்களைப் பிடித்துக் கொள்கிறது. அதனால் ‘தர ஏலுமெண்டால் தரச் சொல்லிக் கேட்டினம். கிடந்துது கொடுத்தோம்’ என நழுவி விடுகிறார்கள். அதனால் உரியவர்களால் எதுவுமே செய்யமுடியாமற் போகிறது.

பாடசாலையையே வியாபார நிலையமாக மாற்றிப் பலர் தாம் சம்பாதித்துக் கொள்ளும் நிகழ்வுகளும் இடம்பெற்ற வண்ணம்தான் உள்ளன. பழைய மாணவர் சங்கத் தலைவர், அபிவிருத்திச் சங்கச் செயலாளர் மைதானப் புனரமைப்பு குழு பொருளாளர் என உலாவரும் சில ஊழல் பேர்வழிகள் - வியர்வையும், குருதியும் சிந்தி உழைத்த பெற்றோரின் பணத்தில் ஒரு பகுதியைத் தமக்குள்ளும் செருகிக் கொள்கிறார்கள். இதற்கு அறுபது லட்சம் வாங்கியும் அரைகுறையாக நிற்கும் ஐம்பதடி வகுப்பறைகளே சாட்சி.

இதனை விட தற்போது புதிதாகவும் ஒரு பாணி எம் மத்தியிலே பரவிவருகிறது. இதனை வேரோடு களையாவிட்டால் அது ஆழமாக வேரோடி பாதீனியம் போல மாறிவிடும். அதாவது பாடசாலைகளில் பிள்ளைகளைச் சேர்க்க பெற்றோர் நேராகச் சென்று அனுமதிகேட்டு கிடைக்காமற் போனால், சில இடைத்தரகர்கள் மூலம் அனுமதியை இலகுவாகப் பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக அவருக்கு ஐந்தோ, பத்தோ ஆயிரங்களுக்குக் குறையாமல் கொடுக்கவேண்டும்.

லண்டனுக்கும்; கனடாவுக்கும், பிள்ளைகளை அனுப்பமட்டுமல்ல, ஆரம்பபாடசாலைக்கும், கல்லூரிக்கும் பிள்ளைகளைச் சேர்க்கக் கூட ஏஜென்சிகள் பலர் - இன்று எம் மத்தியிலே உள்ளார்கள். உருவாகி வருகிறார்கள். இவர்கள் தாம் வாங்கும் தொகையை பாடசாலை நிர்வாகிகளுடனும் பங்கு போட்டுக்கொள்கிறார்கள். பாவம் அப்பாவிப் பெற்றோர்கள்.

எயிட்ஸ் நோய்க்கு மட்டுமல்ல இந்தப் பிரச்சினைக்கும் விழிப்புணர்வு தேவை போலுள்ளது. சிலராவது விழித்துக்கொண்டால் பலர் பிழைத்துக்கொள்வார்கள். ஆனால், யார் விழித்துக்கொள்வது என்பது தான் இன்று எம்முன்னே விரிந்து கிடக்கும் வினாவாகும்.

கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்கும் என்றிருந்தால் - அரிவரிப் பிள்ளை ஆறாம் ஆண்டிற்கு வந்துவிடும். கல்வி அதிகாரிகள் கவனிப்பார்கள் என்றால் அது வெறும் கனவாகவே முடியும். அப்படியானால் யார்தான் கவனிப்பது? தகுதியானவர்கள் தம் பொறுப்பை எடுத்துக்கொள்ள முன்வரவேண்டும்.

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்களின் மேற்புறத்திலே - மாணவர்களை பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், உதவு தொகை வழங்குவதற்குமான பரீட்சை என எழுதப்பட்டுள்ளது. இந்த வருடத்திலிருந்து இந்த வசனத்தை விடுத்துக்கொண்டு, ஆண்டு ஐந்து மாணவர்களுக்கு அவர்கள் கேட்கும் பெறுமதியான பொருளை பெற்றோர் வாங்கிக்கொடுப்பதற்கும், சித்தியடையத் தவறும் மாணவர்கள் பெற்றோரின் திட்டை பெற்றுக்கொள்வதற்குமான பரீட்சையென எழுதினால் பொருத்தமானதாகவிருக்கும் என்பது எமது கருத்தாகும். ☆

---




## தேடலும், ஆய்வும், அங்கீகாரமும்

2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழர் முன்னோடி எழுத்துக்களைக் கொண்ட மீள் படிவு இலச்சினை கிளிநொச்சி அக்கராயனில் நிலையாற்றுக் கரையோரம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் எடுக்கப்பட்ட இந்த மீள்படிவ இலச்சினையிலிருந்த எழுத்து வடிவம் - தமிழகத்தின் பிரபல கல்வெட்டு, சாசன, தொல்லெழுத்து வாசிப்பு ஆய்வாளரான ஐராவதம் மகாதேவனால் ஆராயப்பட்டது. அந்த மீள் இலச்சினையில் உள்ள எழுத்துக்கள் நாகதடம் என்ற சொல்லைக் குறிப்பிடுவதாகவும், இது 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட எழுத்து வடிவம் எனவும் ஐராவதம் மகாதேவன் தெரிவித்தார்.

இலங்கைத்தீவில் எடுக்கப்பட்ட மிகமுக்கிய தமிழ்ச்சொல் எழுத்து வடிவம் இதுவென ஐராவதம் மகாதேவன் குறிப்பிட்டிருக்கிறார்.

இதற்குமுன் 1980 களில் யாழ்ப்பாணம் - ஆனைக்கோட்டையில் கலாநிதி பொ.ரகுபதியினால் இரு தொல்கால மனித எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டன. இவற்றுடன் ஒரு எழுத்து இலச்சினை முத்திரையையும் எடுக்கப்பட்டது. அப்போது அதுவே இலங்கைத்தீவின் முக்கிய தொல்லெழுத்தாக மதிப்பிடப்பட்டது. சிந்துவெளி நாகரிக எழுத்து வடிவத்தை ஒத்ததாக இது இருந்தது.

இந்த முத்திரை 1.7 x 1.5 சென்ரிமீற்றராக இருந்தது. கீழிருந்த எழுத்துக்கள் கோவேத என வாசிக்கப்பட்டது. இது 2300 ஆண்டுகள் தொன்மையான எழுத்து வடிவமென தமிழக அரசின் தொல்லெழுத்து ஆய்வாளர் கலாநிதி கே.வி. ரமேஸ் தெரிவித்திருந்தார். இந்த அரிய தொல் முத்திரை இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு போர்க் காலத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவரால் கொண்டு செல்லப்பட்டுவிட்டது. அது இப்பொழுது தஞ்சாவூர்ப் பல்கலைக்கழகத்தில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதன் பின்னர், பெறுமதிமிக்கதாகக் கிடைதிருக்கும் தொல்லெழுத்து இலச்சினை - அக்கராயன் நிலை ஆற்றங்கரையில் கிடைத்திருப்பதாகும்.

தொல்லியல் தேடலாளர் ந.குணரட்ணம் - அக்கராயன் குளத்தில் நீர் நிரப்பும் நிலையாற்றங் கரையிலுள்ள தொல்லியல் மையத்தில் தேடலை மேற்கொண்டபோது, இந்த எழுத்து இலச்சினையைக் கண்டெடுத்தார். பின்பு ஐராவதம் மகாதேவனின் வாசிப்புக்கு அதன் பிரதி கையளிக்கப்பட்டது.

இதிலுள்ள சொல் ‘நாகதடம்’ எனவும், இருவரிகளில் அமைந்துள்ளதாகவும் - இது 2200 ஆண்டுகளுக்கு முற்பட்ட வடிவம் எனவும் ஐராவதம் மகாதேவன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வடிவம் இங்குள்ள நிறுவனமயப்படுத்தப்பட்ட வரலாற்று ஆய்வாளர்களிடம் காட்டப்பட்டபோது, அவர்கள் இதனைக் கருத்தில் எடுக்கவில்லை. அத்துடன், இது பற்றிய ஆய்வினையும் மேற்கொள்ள முன்வரவில்லை. இதன் காரணத்தால் வன்னியில் தொல்லியல் சான்றுகள் - தேடல், சேகரித்தல், மையப்படுத்தப்படல், காலக் கணிப்புக்குட்படுத்தப்படல், ஆய்வுகளுக்குட்படுத்தப்படல் என்பன தொல்லியல் துறையில் ஆர்வம் கொண்டோரால் தனிப்பட்ட முயற்சியால் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன. தமிழீழ அரும்பொருட் காப்புக் கழகத்துடன் அவர்கள் இணைந்து செயற்படுகிறார்கள். தொல்லியலை முடிந்த முடிவான ஒரு வரலாற்றுக் கருத்தாகக்கொண்டு நகர்த்தாது, சான்றுகளின் உண்மைத்தன்மை, அறிவியல் பூர்வமாக ஆராயப்பட்டு, அவை தொடர்பான உண்மைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. இதற்குப் புலம்பெயர்நாடுகளில் அறிவியல் பூர்வமாகத் தொல்லியலைக் கற்போர் - தமது ஆதரவை வழங்க முன்வந்துள்ளனர்.

அண்மைக்காலங்களில் வன்னியில் இலங்கைத் தொல் வரலாற்றில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வகையில் மிகமுக்கிய தொல்மையங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இவை வெளிப்படுத்தவும்பட்டன. ஆன்றால், நிறுவனமயப்பட்ட துறைசார்ந்தோர் இதுபற்றி இதுவரை ஆராய முன்வரவில்லை என்பதே ஈழத்தமிழினத்திக்குக் கவலை தரக்கூடிய விடயமாகும். சிங்கள தேசத்தில் நிறுவன மயப்பட்டோர் - நிறுவனமயப்படாத ஆய்வாளர்களையும் அங்கீகரித்து இணைத்து செயற்படுகின்றனர்.

தமிழ் உலகில் அப்படியல்ல. நிறுவனமயப்பட்டோர் - நிறுவனமயப்படுத்தப்படாதோரை புறமொதுக்குவதும், இருட்டடிப்புச் செய்வதும், அவர்களின் சான்றுகளைக் கருத்தில் எடுக்காமலும் செயற்படுகின்றமையும் - கவலை தரத்தானே செய்யும்.

இது தமிழ்வரலாற்றுக்குக் கிடைத்த சாபக்கேடா...?

- திரு.த.திரு

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**
கடன் அறிந்து காலம் கருதி இடன் அறிந்து
எண்ணி உரைப்பான் தலை.
திருக்குறள்.

## நமது நோக்கு

### சிறிலங்காவின் அரசியல் நெருக்கடியும் யசுஷி அகாஷியின் வருகையும்

ஜப்பானின் விசேட தூதுவர் யசுஷி அகாஷியின் சமாதான நடவடிக்கைகளின் தற்போதைய நிலை குறித்து ஆராயவும், அதன் எதிர்கால முன்னெடுப்புக்கள் குறித்து கலந்துரையா டவும் மீண்டும் கொழும்புக்கு வரவுள்ளார் என்பது சமாதான ஆர்வலர்களால் மிகவும் எதிர்பார்க்கப்படும் ஒரு விடயம் என் பது சொல்லித் தெரிய வேண்டிய ஒன்றல்ல.

முன்னர் அவர் இங்கு வருகை தந்தபோது இருந்த சிறிலங் காவின் அரசியல் சூழலும், தற்போதுள்ள அரசியல் சூழலுக்கும் உள்ள இடைவெளியும், மாறுதல்களும் மிகவும் குழப்பத்தை உண்டுபண்ணக் கூடியதாகவே அவருக்கு இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அப்போது சமாதானம் குறித்த செயற்பாடுகளில் ரணிலின் கை ஓங்கியிருந்தது. ஜனாதிபதி தனக்கான நாட்களை மதிப் பீடு செய்தபடி நிலைமைகளை உன்னிப்பாக கவனித்துக் கொண்டிருந்த நேரம் அதுவாகும். இலங்கைக்கு உதவி வழங் கும் நாடுகளின் உச்சி மாநாடு டோக்கியோவில் நடைபெற இருந்த போது அதில் விடுதலைப்புலிகளை கலந்து கொள் ளுமாறு வலியுறுத்திக் கூறி வற்புறுத்தி அழைக்கவே அவர் அப்போது வருகை தந்திருந்தார்.

அந்த மாநாடு சமாதானத்தின் பெயரால் சிறிலங்கா அரசுக்கு மிகவும் அனுகூலமான அம்சங்களை, குறிப்பாக நிதி விடயத் தில் மிகவும் சாதகமான அதே சமயம், மிகவும் தேவையான ஒன்றாக இருந்ததால், விடுதலைப்புலிகளையும் சாட்சியாக வைத்து அதனை நிறைவேற்றிக் கொள்ள மேற்கொண்ட அந் தத் திட்டத்தை, புலிகள் அம்மாநாட்டை உறுதியாகப்புறக் கணித்ததன் மூலம் முறியடித்தனர்.

அப்போது சமாதான முன்னெடுப்புக்கள் ஒரு தேக்க நிலையை அடைந்திருந்தன. அரசு விடுதலைப்புலிகளுடன் மேற்கொண் டிருந்த புரிந்துணவு உடன்பாட்டில் தனக்குச் சாதகமான அம் சங்களை மட்டும் நிறைவேற்றிக் கொண்டு, தமிழ்மக்களுக்குத் தேவையான, அவர்களுக்கு நன்மை பயக்கும் எதனையும் செய்யாதநிலையில், சமாதானப் பேச்சுவார்த்தைகளை காலம் கடத்தி ஏமாற்றும் ஒரு யுத்தியாகவே கையாண்டு வந்ததை தமிழ்மக்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

இந்த நிலையில் யசுஷி அகாஷியின் டோக்கியோ மாநாட் டுக்கான அழைப்பை, தமது பக்க நியாயங்களை எடுத்துக்கூறி விடுதலைப்புலிகள் நிராகரித்த போது அவரால் எதுவும் கூறமுடி யாது போயிற்று.

வெறுமனே வாக்குறுதிகளை மட்டும் நம்பும் நிலையில் தமிழ் மக்களும் இல்லை. விடுதலைப்புலிகளும் இல்லை என்பதை அந்தச் சூழ்நிலையில் அவர் நன்கு புரிந்து கொண்டிருக்க வேண்டும். அப்போதைய நிலையில் அவர் ரணில் அரசின் நலனைப் பேணும் ஆர்வம் கொண்டவராகவும் இருந்திருப்பார். டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகளின் பிரசன்னம், ரணில் தலைமையிலான அரசுக்கு வலுவூட்டக் கூடியதாக இருக்கும் என்பதில் நம்பிக்கை கொண்டவராகவும் கூட இருந்திருப்பார். ஆனால், நிலைமை விடுதலைப்புலிகள் விடயத்தில் அவருக்குச் சாதகமாக அப்போது அமையவில்லை.

இப்போது முழு நிலைமைகளுமே மாறியுள்ளன. பெருந்தொகை நிதியைக் கடனாக வழங்க உறுதியளித்து டோக்கியோ மாநாடு ரணிலின் அரசை அதன்மூலம் வலுவான ஒன்றாக மாற்ற நினைத்து அதன்மூலம் ஜனாதிபதியை வாயடைக்க வைத்து செயலற வைக்கலாம் என்றும் நினைத்த மேற்குலகின் கனவு தற்போது சிதைந்துள்ளது. ஜப்பானின் விசேட தூதர் அகாஷி அப்போது சமாதானத்தை வலியுறுத்த வந்த மேற்குலகின் தூதராகவும் மறைமுகமாக செயற்பட்டார் என்பதும் தெளிவு. எனவே இப்போதைய சூழலில் நிலைமை தலைகீழாக மாறி, சந்திரிகா தன் நிறைவேற்று அதிகார சக்தி மூலம் ரணிலை பலவீனமாக்கி, சமாதானத்தை கேள்விக்குறியாக்கியுள்ள நிலையில் அகாஷியின் மறுவருகை நடைபெறவுள்ளது. இப்போது அவர் வருவது கொழும்பின் அரசியல் நெருக்கடி குறித்து ஆராயும், அதனைத் தீர்க்கும் வழிவகைகளை கண்ட றியவும் தான் என்று கூறப்படுகிறது.

அது மட்டுமல்ல சமாதானத்திற்கு ஏற்பட்டிருக்கும் முட்டுக் கட்டை நிலையை நீக்கி அதனை மீண்டும் தொடரவைக்கும் செயற்பாடுகள் குறித்து ஆராயவும் போகிறாராம். அதற்காக ஒரு ஆய்வு மாநாட்டை கூட்டவுள்ளாராம். நல்ல விடயம்தான்.


ஆனால், அந்த மாநாடு சாதகமாக அமையாது என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் வெளிப்படையாகவே அறிவித்துள்ள நிலையில் அவர் இங்கு வந்து என்ன செய்யப்போகிறார் என்பதே இப்போதுள்ள கேள்வி. அகாஷி முன்பும் ஒரு மாநாடு தொடர்பாகவே இங்கு வந்தார்.

அப்போது வந்த நோக்கம் அவருக்கு சாதகமாக அமைய வில்லை. இப்போது ஒரு மாநாடு குறித்த நோக்கத்துடனேயே வரப்போகிறார். இதுவும் அவருக்கு சாதகமாக அமையாது என்று அரசு தரப்பிலே கூறப்பட்டுள்ளது.

எதுவானாலும் அகாஷியின் இவ்வருகை இலங்கையின் சிக்கலான அரசியல் நெருக்கடி நிலை குறித்து மட்டுமல்ல, இனப்பிரச்சனை, சமாதான தீர்வு ஒன்றை காணவிளையும் சர்வதேச முயற்சிகளுக்கு, ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து ஒருமித்த கருத்துடன் இயங்காது வெற்றி கிடைக்கப் போவதில்லை என்பதையும் அவருக்கு உணர்த்தவே செய்யும்.

அதுமட்டுமல்ல விடுதலைப்புலிகள் மட்டுமே சமாதான முன் னெடுப்புக்கு ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருக்கும் ஒரே பகுதியினர் என்பதையும் இவ்விஜயத்தின் போது புரிந்து கொள்ளவும் கூடும்.

## நாடும் நடப்பும்




### அரசின் உறுதிமொழியை அடுத்து
# தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் வேலை நிறுத்தத்தை கைவிட்டது!

அரசு வழங்கிய உறுதிமொழியை அடுத்து, தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கம் நடத்தவிருந்த வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்பட்ட வற் வரியின் காரணமாக, வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் எரி பொருடகளின் விலை அதிகரித்துள்ளது. இதன்காரணமாக தனியார் பஸ் சேவைக் கட்டணங்களை அதிகரிக்க அரசு அனுமதியளிக்கவேண்டும். இல்லாவிடின், வற்வரியைக் குறைக்கவேண்டும் எனக்கோரியே வேலை நிறுத்தப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்ட, தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் கேட்டிருந்தது.

ஆனால், நேற்றுக்காலை நிதியமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்ற சந்திப்பொன்றில், அரச தரப்பால் சாதகமான பதிலளிக்கப்பட்டமையால், இந்த வேலைநிறுத்தப் போராட் டத்தை தற்காலிகமாக விலக்கிக்கொள்வதாகத் தனியார் பஸ உரிமையாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான ரவி கருணாநாயக்க, பந்துலகுணவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டனர். வற் வரி காரணமாகத் தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு எழுந்துள்ள நெருக்கடியைத் தவிர்க்க, அரசு வழிசெய்யும். தனியார் பஸ் உரிமையாளர்களுக்கு மானியம் வழங்குவதற்கான நடவடிக் கைகள் எடுக்கப்படவுள்ளன என அமைச்சர்கள் தெரிவித்தனர். இதனை ஏற்றுக்கொண்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள், பதினைந்து நாட்களுக்குள் சாதகமான முடிவை அரசு தரத்தவறின், தாம் வேலைநிறுத்தப் போராட்டத்தில் மீண்டும் ஈடுபடவுள்ளதாக எச்சரிக்கை விடுத்தனர். (01)

# கம்பளை பிரதேச பாதுகாப்பு மேலும் பலப்படுத்தப்பட்டது!
### பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

கம்பளைப் பிரதேசத்தின் பாதுகாப்புக்காகப் பொலிஸாருக்கு உதவும் முகமாக இராணுவம் அழைக்கப்பட்டுள்ளதாகக் கம் பளை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கே.பி.ராஜபக்ஷ தெரிவித்தார்.

பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தினால், கம்பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பலியானதை அடுத்து, நேற்றுமுன்தினம் அதிகாலை அந்தப் பிரதேசத்தில் பதற்ற நிலை தோன்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் இரு குழுவினருக்கிடையில் ஏற்பட்ட மோதலைத் தடுப்பதற்காகப் பொலிஸார் மேற்கொண்ட துப்பாக் கிப் பிரயோகத்தின்போதே அந்த இளைஞர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கம்பளை - நுவரெலியா வீதியில் நகர் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இசைநிகழ்ச்சியைப் பார்வை யிடுவதற்கு வந்திருந்த குழுக்களுக்கிடையே மோதல் ஏற் பட்டதாகவும், அந்த மோதலை தடுக்கும் முயற்சியாகப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இந்தத் தாக்குதலில் பொலிஸ் பரிசோதகர் உட்பட ஆறு பேர் காயமடைந்துள்ளனர். பொலிஸாருக்குச் சொந்தமான மூன்று வாகனங்களும் சேதமாக் கப்பட்டன.

## காயமடைந்த எட்டு இளைஞர்களும 15 நாட்களுக்கு விளக்கமறியலில்!
### நீதிவான் உத்தரவு

இசைநிகழ்ச்சியின்போது பொலிஸாரைத் தாக்கிக் காயப் படுத்திய எட்டு இளைஞர்களையும், எதிர்வரும் பதினைந்து நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவானால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கம்பளைப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இசைநிகழ்ச்சி ஒன்றின்போது இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலைத் தடுப்பதற்காகப் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன்போது இளைஞர் ஒருவர் கொல் லப்பட்டார். இதனால், ஆத்திரமடைந்த வேறுசில இளைஞர் கள் பொலிஸாரைப் பலமாகத் தாக்கியத்தில், ஆறு பொலி ஸார் காயமடைந்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர் புடையவர்கள் எனும் சந்தேகத்தின் பேரில் எட்டு இளை ஞர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர். (01)

## தனியார் பஸ் சாரதி, நடத்துநர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன

சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்க ளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்களின் தலைமைச் செய லகம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் 20 ஆம் திகதி தொடக்கம் இந்த அடையாள அட்டைகள் விநியோகிக்கப்படவுள்ளதா கவும், அதன்பின்னர் அடையாள அட்டையின்றி சேவையில் ஈடுபடும் சாரதிகள், நடத்துநர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, பிரதான வீதிகளில் பஸ்களின் வேகங்களை அவதானிப்பதற்காக நிறுத்தப்பட்டுள்ள அவதானிப்பாளர்களுக் குரிய அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாகவும் அறி விக்கப்படுகிறது. (ச)

## கேணல் கிட்டுவின் 11 ஆவது நினைவையொட்டி சாவகச்சேரி வைத்தியசாலையில் சிரமதானம்

(தென்மராட்சி)

தென்மராட்சி தேசிய எழுச்சிப்பேரவைின் ஏற்பாட்டில் கேணல் கிட்டுவின் 11 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு சாவகச்சேரி அரசினர் பொதுவைத்தியசாலையில் சிரமதானம் நடைபெற்று வருகின்றது. பொதுமக்களின் ஒன்றியமும், அரச சார்பற்ற அமைப்புக்களும், தென்மராட்சி வணிகர்சங்க ஒன்றியமும் பொதுமக்களும் தென்மராட்சி வ்டுதலைப்புலிகளின் அரசியல்துறையினருடன் இணைந்து நேற்று முன்தினம் முதல் சிரமதானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். மருத்துவ மனையைச்சுற்றியுள்ள பற்றைகளை அளிப்பதில் தொண்டர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த மருத்துவமனையின் தலைமை மருத்துவர் பொது அமைப்புக்களின் பணியினை பாராட்டியதுடன், மக்களின் பரிபூரண ஒத்துளைப்புடன் இந்த சிரமதானப் பணிகள் நடைபெற்றுவருவதாகவும், மருத்துவ மனையில் போதிய இடவசதியோ, உள்நோயாளர்களுக்கான படுக்கை இருப்பிட வசதிகளோ போதியளவு இல்லை என்றும், கழிவறைகளும், குடிநீர் தட்டுப்பாடும் இங்கு பல பிரச்சினை களை ஏற்படுத்தியிருப்பதாகவும் தெரிவித்த அவர் - மற்ற திணைக்களங்களுக்கு அரசு வழங்கும் சலுகைகள், செயல் திட்டங்கள் போல் தென்மராட்சி மக்களின் பெரிய மருத்துவ மனையை அரசும், அரசசார்பற்ற நிறுவனங்களும் முன்வந்து தேவைகளைப் பூர்த்தி செய்வதே இன்றைய கட்டாய தேவை எனவும் அவர் தெரிவித்தார்

## யாழ்ப்பாணம் : ஒரு சூழல் நோக்கு



# நகருக்கான இயல்பை இழந்துவரும் யாழ்ப்பாணத்தின் இன்றைய சூழல்

'யாழ்' என்பது யாழ் பட்டணத்துக்குக் கிடைத்த மங்கல மகுட வாக்கியம். ஆனால், இன்று அதன் சூழலும் 'வில்' போன்று மாறியுள்ளமை அச்சமும் பயமும் கலந்த ஓர் அகப் புற சூழலைத் தோற்றுவித்துள்ளது. இதனால் 'யாழ்' என்ற மங்கல மகுட வாக்கியத்தை பாழாக்கிவிடுமோ என்ற பய உணர்வு ஆட்கொள்வது தவிர்க்கமுடியாத ஒன்றாகிவிடுகிறது.

இங்கு 'யாழ்' ஆனது ஏன்? 'வில்' போன்று காணப்படுகிறது. அவ்வாறு வில் முனையில் வாழ்கின்ற அச்சவுணர்வு ஏற்பட யாதுகாரணம்? சூழல் என்றால் என்ன? யாழ். சூழலானது எப்படிப்பட்டது? அதனுடன் கூடிய சமூக அமைப்பு யாது? என்னும் விடயங்களே தெளிவாக்கப்படவேண்டியவொன்றாகும்.

யாழ்ப்பாணம் போர்முறை அழிவிற்கு உட்படுத்தப்படாத சமூக வாழ்க்கை நடத்திய காலத்தில், நல்லூர்க் கந்தன் திருவிழாவுக்கு வருகைதந்த தமிழக அறிஞர் ஒருவர் யாழ். பட்டணமும் சூழலுக்குமான தூய்மையைக் கண்டு பின்வருமாறு கூறியதாக அறியமுடிகின்றது.

"நல்லூர்த் தேர்த் திருவிழாவுக்குச் சென்ற நான் - அந்தச் சூழலில் காணப்பட்ட தூய்மையைக் கண்டு வியந்தேன். எங்கு பார்த்தாலும் பளிச்செனச் சுத்தமாக இருநததுடன், அங்கு வருகைதந்த இளைஞர்கள் சுத்தமான ஆடை அணிந்து பண்புடன் காணப்பட்டனர். அங்கு தவறுதலாக ஏதேனும் குப்பைகள் விழுந்தாலும் அதை அகற்றுவதில் தொண்டர்கள் ஈடுபட்டிருந்தனர். இதனைக் கண்ட எனக்கு ஓர் அச்ச உணர்வு மேலிட்டது. ஏனெனில் தற்செயலாக நான் மயங்கி விழுந்தால், என்னையும் ஒரு குப்பையென எண்ணி அகற்றிவிடுவார்களோ என்பதுதான்" என இறுதியில் வேடிக்கையாகவும் குறிப்பிட்டார் என்பதை தமிழ் நாட்டில் வெளியாகும் ஓர் சஞ்சிகையில் பாத்திருந்தேன். இந்தக் கூற்றானது அவரது கருத்தினை வரிக்கு வரி கூறுவதாக அமையாத போதும் அதன் சாராம்சத்தினைக் கொண்டுள்ளது. இப்படிப்பட்ட தூய்மைக்கும் கலாசாரத்திற்கும் பெயர்போன யாழ்ப்பாணம் இன்று - கலாசார மாண்பு கெட்டு தூய்மையற்று நாற்றமடிக்கும் நகரமாகக் காட்சியளிப்பதே கவலைக்குரியதாகும்.

இன்று பன்னாட்டு சுற்றுலாப் பயணிகள் யாழ். வருவது 'பழைய மாண்புடைய' யாழ்ப்பாணப் பட்டணத்தையும் சூழலையும் அதன் கலாசார மாண்பினையும் எண்ணியே ஆகும். ஆனால், அவர்கள் எதிர்பார்த்து வந்த சூழல் தறிகெட்டுச் சீரழிந்துபோயுள்ளதைக் கண்டு வியப்படைந்து வெறுப்படைந்து திரும்பிச் செல்வதனைக் காணலாம்.

இங்கு காணப்படும் பௌதீகச் சூழல் இன்றுள்ள நிலைப்படி நோக்குகையில் - அவை சாக்கடைத் துர்நாற்றம், வீதி ஒழுங்கின்மை, தூய்மையற்ற பிரதேசம், புதர் மண்டிக் கிடக்கும் கடைத்தெருக்கள், பெருக்கெடுக்கும் நுளம்புத் தொல்லை, ஈத்தொல்லை, சிறந்த கழிப்பிடமின்மை, கட்டாக்காலி நாய்த் தொல்லை என்பவற்றால் நகரம் திணறடிக்கப்படுகிறது.

இவற்றோடு போதிய திட்டமிடல் இன்மையால், நகரின் மத்தியில் அமைக்கப்பட்ட கட்டட அமைப்பு என்பனவும் இவற்றினைச் சீர்குலைப்பதாக அமைகிறது.

பிரதேச வடிகால் அமைப்புக்களை நோக்குகையில், அவை மிகவும் பண்டைய முறையினைப் பின்பற்றி அமைந்ததோடு அழுக்கடைந்த நிலையில் காணப்படுகின்றன. இவை கழிவுநீர் சரியாக வழிந்தோட முடியாது தேங்கிக் காணப்படுவதோடு புதர்கள் மண்டி பாழடைந்து சீரற்றுக் காணப்படுகின்றன. இது யாழ். மாநகரசபையின் சீரற்ற வடிகால் அமைப்பு நிர்வாகமுறையினை எடுத்துக்காட்டுவதோடு, இந்த வடிகால் சீரான நீரோட்ட வடிவமைப்பில் அமைக்கப்படாததோடு, அவை குப்பை கூளங்கள் நிறைந்து முறையான பராமரிப்பற்றுக் காணப்படுகின்றன.

இத்தோடு இவை விஷ ஜந்துக்களின் வாழ்விடமாகவும் மாறிவிடுவதாலும், திருடர் மற்றும் சிறு வழிப்பறிக் கொள்ளையர்களுக்கு சாதமாக அமைவதாலும் இப்பிரதேசத்தில், இரவில் நடமாடுவது என்பது அச்சம் கலந்த பய உணர்வை ஏற்படுத்திவிடுகின்றன.

மேலும் இந்தச் சாக்கடையில் வைத்தியசாலைக் கழிவுகளும் சில விடுதிகளின் நீர்க் கழிவுகளும் இணைந்து இவை பண்ணைக் கடல் தொகுதியில் கலந்துவிடுகின்றன. இந்தச் செயற்பாடானாது வினைத்திறன் அற்ற முகாமையின் திட்டமிடல் செயல்முறையினையே எடுத்துக் காட்டுகிறது.

இங்கு இத்தகைய கழிவுகள் கடலில் கலக்கவிடப்படுவதால், அதன் மாசடைவு பற்றியும் எதிர்கால பாதிப்புப் பற்றியும் இதனால் ஏற்படும் சமூகத் தாக்கங்கள் பற்றியும் திட்டமிடல் குழுவானது எவ்வகை சிந்தனையையும் எடுக்கவில்லை என்பதையே காட்டுகிறது.

யாழ். குடாநாடானது மூன்று பக்கங்களும் கடலால் சூழப்பட்ட ஓர் இயற்கை எழில் கொஞ்சும் நகரமாகும். இந்தக் கரையோரத்தில் இயற்கை எழிலோடு இணைந்து வாழ்க்கை நடத்தும் மக்கள் தமது சீவனோபாயத் தொழிலாக மீன்பிடித்தலையே மேற்கொள்கின்றனர். இவ்வாறே பண்ணைக் கடலை அண்டிய பிரதேச மக்களும் தமது வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டுகின்றனர்.

எனவே, இந்தப் பகுதியில் சாக்கடைக் கழிவுநீர் கலப்பதாலும், இங்கு மீன்கள் பிடிக்கப்படுவதாலும் இதனை வாங்கி நுகரும் மக்கள் பல பாதகமான பின்விளைவுகளை எதிர் நோக்கவேண்டிய நிலை ஏற்பட வாய்ப்பிருக்கிறது.

இத்தகைய பின்விளைவானது திடீர் பாதிபபினை ஏற்படுத்தாவிட்டாலும் நீண்டதொரு கால ஓட்டத்தில், நுகர்வோருக்கு அல்லது அவர்களால் ஊடுகடத்தப்பட்ட சந்ததியினருக்கோ பாரிய நோய்க் காரணிகளை ஏற்படுத்தலாம் என்புது உண்மையே.

இவை பின்மாற்றப்படாத அல்லது கட்டுப்படுத்த முடியாத சந்ததி நோய்களை ஏற்படுத்திவிடலாம். எனவேதான், இத்தகைய விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் வெறுப்புடன் செயற்படாது, விழிப்புணர்வுடன் செயற்படுதல் வேண்டும்.

மேலும் இங்குள்ள வீதி அமைப்புக்களை நோக்குகையில் அவை குண்டும் குழியுமாக இருப்பதோடு போதிய விசாலமின்றி ஒடுக்கமாகவும், போக்குவரத்துக்கள் ஒரே பாதையினூடாக நடைபெறுவதோடு, நடைபாதை வியாபாரிகளையும் தன்னகத்தே கொண்டுள்ளன.

இந்த நிலையானது யாழ். பட்டணத்தில் ஒருவர் சென்று மீண்டும் உயிருடன் திரும்பி வருவதற்கான நிகழ்தகவு மிகக் குறைவாக உள்ளதையே எடுத்துக் காட்டுகிறது.

இவற்றோடு இந்த வீதிகளில் வாகனங்களின் கட்டுப்பாடற்ற வேகம், ஏ.9 பாதைக்கான நுழைவுத் தடை நீக்கத்தால் பெருக்கெடுத்த வாகன வரவு என்பவற்றால், பழைய தெருக்களையும் பாழடைந்த வீதிகளையும் கொண்ட யாழ். பட்டணமும் சூழலும் மேலும் பாதிக்கப்படும் நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் நாளாந்தம் நிகழும் விபத்துக்களும், அதனால் ஏற்படும் மரணங்களும் மக்கள் மனங்களில் சாதாரண நிகழ்வுகளில் ஒன்றாகிவிட்டதைக் காணக்கூடியதாகவுள்ளது.

நகர கட்டமைப்புக்கள் மிக நெருக்கமாகவும், போதிய சுகாதார கழிப்பிட வசதிகளையோ, அகன்ற அல்லது பரந்த செம்மையான தெருக்களையோ கொண்டிராத ஒழுங்காகத் திட்டமிடப்படாத நகரமாகக் காட்சியளிக்கின்றது.

மேலும் இவை ஒருபகுதியை நோக்கிக் குவிந்துள்ளதோடு தன்னகத்தே ஒரு போதனா வைத்தியசாலையைக் கொண்டுள்ளதோடு, மையத்தில் பேருந்து தரிப்பிடத்தினைக் கொண்டுள்ளமையும் சன நெரிசலோடு வாகன நெருக்கடியினை அதிகரித்து வீதி விபத்துக்களையும் கட்டுப்படுத்த முடியாத நிலையில் காணப்படுகிறது.

இத்தகைய அமைப்பு முறையானது பாரிய குறைபாடுகளைக் கொண்டுள்ளது. இவற்றில் முக்கியமான ஒன்றான - வைத்தியசாலைக்கு அண்மையில் அமைக்கப்பட்ட நகரம் அல்லது நகரத்திற்கு அண்மையில் அமைக்கப்பட்ட வைத்தியசாலை என்பது நோயாளிகளின் நலனுக்கு உகந்ததாக அமையாது.

ஏனெனில், வைத்தியசாலை என்பது நோயாளர்களைப் பராமரிக்கும் ஒரு விடுதியாகும். இந்த நிலையில் இவர்களுக்குச் சாந்தம், அமைதி நிறைந்த சூழலே திருப்திதரக்கூடிய ஒன்றாகும். ஆனால், வைத்தியசாலைக்கு அண்மையில் நகரம் இருப்பதால், இந்த வைத்தியசாலை என்பது அமைதியற்ற ஆடம்பரமான ஹோட்டல் ஒன்றுபோல் காணப்படுகின்றது.

இதனையே மேலும் விளக்குவதாயின் யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதான வாசல் வழியாக நகரின் பிரதான வீதி செல்வதால், எந்தநேரமும் போக்குவரத்துச் சந்தடி காணப்படுகிறது. இதனைச்சூழ நகர அமைப்புடன் கடைகள் நிறைந்திருப்பதால், அவற்றிலிருந்து வெளிவரும் பொப் பாடல்கள், விளம்பர ஓசைகள் என்பனவற்றாலும் வைத்தியசாலையின் அமைதிநிலை சிதறடிக்கப்படுகின்றது.

இதனால், இவற்றினைத் தடுக்க அல்லது தவிர்க்க வைத்தியசாலை நகரத்தினைத் தாண்டியோ அல்லது நகர மையங்கள் வைத்தியசாலையைத் தாண்டி கணிசமான தொலைவிலோ அமைதலே சிறந்தது. வைத்தியசாலைக் கழிவுகள் சென்றடைந்து பயனுள்ள நீர் நிலைகளில் கலப்பதால், அந்த நீர் நிலைகளில் இருந்து பெறப்படும் நுகர்வுப் பொருட்களும் (மீன், உப்பு) மாசடைகின்றன.



இதனால், இவை மனித பயன்பாட்டுக்கு ஒவ்வாத விளைபொருட்களாக மாறிவிடும். அத்தோடு இந்தக் கழிவுகள் தரையில் புதைக்கப்படுவதால் நிலத்தடி நீரும் மாசுபட்டு அதனூடாக குடிநீர்ப் பிரச்சினையும் தோன்ற வாய்ப்பு ஏற்படுகின்றது. இத்தகைய நிலையானது ஆரோக்கியமான மனித வாழ்க்கைக்கு தீங்கு விளைவிப்பதாக அமைந்துவிடும்.

எனவே, இத்தகைய கழிவுகளைக் குறிப்பிட்ட இடத்தில் தேக்கி அதனைக் கொள்கலன்கள் மூலம் எடுத்துச்சென்று மனித வாழ்வுக்கும் சூழலுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் அழித்தொழித்தல் வேண்டும்.

இதுவரையிலும் நாம் யாழ். பௌதீகச் சூழலைப் பார்த்தோம். அடுத்து பண்பாட்டுச் சூழலை எடுத்து நோக்குகையில், ஏ - 9 நுழைவுவழிப் பிரவேசத்தால் பொருள் வருகையில் ஒரு விரிவான பெருக்கமும் அதனூடான பொருளாதார விலையமைப்பும், அதனால் உண்டான தகவல் தொழில் நுட்ப சாதனங்களின் மிகையான குவிவும் யாழ். சமூகத்தில் ஒரு கலாசார விரிவுடன் கூடிய தளர்வினை ஏற்படுத்தியுள்ளதெனலாம். இது இந்தச் சமூகத்தினிடையே ஒரு சினிமா வாடையுடன் கூடிய வலைப்பின்னல் அதிர்வினை ஏற்படுத்திவிட்டதெனலாம். இந்த நிலையானது ஒரு சினிமாக் கலவைச் சேர்மானத்தை எமது சமூகம் தமக்குள் கலந்து அளவுபார்க்கும் நிலைமையினைத் தூண்டிவிட்டது.

இதனால், நிலைதவறிய விடலைப் பருவத்தினரை யாழ். பட்டணத்தில் காணப்படும் பெருக்கெடுத்த மதுக்கடைகளும், மலிவாகக் கிடைக்கும் மதுவகைகளும் 'மன்மத நிலை'க்கு மாற்றிவிட்டன. இதனால், எழுச்சிகொண்ட இளைஞர் குழுக்களின் வன்முறைகளே இன்றைய ஆட்கடத்தல், கொலை, களவு, பாலியல் வல்லுறவு எனத் தொடர்ந்து செல்லும் பட்டியலாகும்.

இவ்வாறு இன்று யாழ் பட்டணமும் சூழலும் - பௌதீக பண்பாட்டுச் சூழல் பாதிப்போடு சமூகச் சூழல் பாதுகாப்பு என்பதிலும் ஒரு தெளிவற்ற நிலைமையைத் தோற்றுவித்துள்ளது. மேலும் நகரெங்கும் காணப்படும் கட்டாக்காலி நாய்களின் தொல்லை, மற்றும் அதிகரித்த பிச்சைக்காரர்களின் வரவும் யாழ். மக்களிடையே ஓர் உளக்குழப்பமான நிலையினை ஏற்படுத்தியுள்ளது.

இங்கு பிச்சை எடுப்பவர்களில் - முதியோர், விதவைகள், சிறுவர்கள், இளைஞர்கள் என்ற நான்கு பிரிவினர் காணப்படுகின்றனர். இவர்களின் தடைகளைத் தளர்த்த அல்லது இவர்களால் இடருறும் சமூகத்தினைக் காக்க, அரசோ அல்லது பணம் படைத்த பெரும் முதலாளிகளோ இவர்களின் எதிர்காலத்துக்குக் கைகொடுத்தல்வேண்டும்.

பிச்சை எடுத்தல் தொழிலில் ஈடுபடும் - முதியோர்களுக்குச் சுகவாழ்வும், சிறுவர்களுக்கு புனர்வாழ்வும், விதவைகளுக்கு மறுவாழ்வும், இளைஞர்களுக்குத் தொழில் வாழ்வும் கொடுத்தல் வேண்டும்.

இதற்காக முதியோர் இல்லங்கள், சிறுவர் பராமரிப்பு நிலையங்கள், சுகவாழ்வு மையங்கள், தொழில் இல்லங்கள் என்பன நிறுவப்பட்டு உதவமுன்வரவேண்டும்.

இவற்றை மனதிற்கொண்டு - இங்குள்ள கல்வி அமைப்புக்கள், கலாச்சார நிர்வாகங்கள் ஆகியன சிறப்பாகச் செயற்பட்டு, நகர நிர்வாக முறையில் சிறந்த கட்டமைப்பைக் கொண்டுவர முயலவேண்டும்.

அத்துடன் இந்தப் பிரதேச சமூகமானது தமது விழுமியங்களை மதித்து நடத்தல் வேண்டும். ஒவ்வொரு மனிதனும் 'நான் நானாக இருக்கிறேன்' என்ற சிந்தனைக்கு வருதல்வேண்டும்.

இத்தகைய ஒருநிலை தோன்றுகின்ற போது பழைய மாண்புடைய சமூகத்தினை மீண்டும் தரிசிக்கும் வாய்ப்புக் கிட்டுமெனலாம்.

எனவே, இவை அனைத்தும், செவிடன் காதில் ஊதிய சங்காகவோ, குருடன் கண்ட கொக்காகவோ, முடவன் துரத்திப் பிடித்த முயலாகவோ அமையாது நல்லவன் கண்ணில்பட்ட முத்தாக வேண்டும்.

**"பழமையில் புதுமையைக் காண்போம்**
**புதுமையில் எளிமையைக் காண்போம்"**
**"எளிமையில் தூய்மையைக் காண்போம்**
**தூய்மையில் உயர்வைக் காண்போம்**
**உயர்வில் மகிழ்வைக் காண்போம்"**

**சே.ஜெயானந்தன்**
வருகை விரிவுரையாளர்,
தொழில்நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம்

# 1967 இல் நடந்த போரில் இஸ்ரேல் கைப்பற்றிய கோலான்குன்றுப் பிரதேசத்தை மீளப் பெற அமெரிக்க உதவியை நாடுகின்றது சிரியா!



இஸ்ரேலுக்கும் சிரியாவுக்குமிடையே 1967 ஆம் ஆண்டு நடந்த போரில், சிரியாவின் கோலான்குன்றுப் பிரதேசம் இஸ்ரேல் படையினரால் கைப்பற்றப்பட்டிருந்தது.

அதனை மீள ஒப்படைப்பது தொடர்பான பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிப்பதற்கு உதவுமாறு அமெரிக்காவிடம் சிரியா அண்மையில் கேட்டுள்ளது.

இதேவேளை - லெபனான், ஹிஸ்புல்லா ஆகிய போராளிக் குழுக்கள் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்துவதற்கு, சிரியாவின் ஆதரவே காரணமென இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷரோன் சிரியா மீது குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஆகவே பேச்சுக்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் போராளிக் குழுக்களுக்கான ஆதரவை சிரியா நிறுத்தவேண்டுமெனவும் ஷெரோன் கேட்டுள்ளார்.

இதனிடையே இஸ்ரேல் ஜனாதிபதி மொசிகற்சே - சிரிய ஜனாதிபதி பஸார் அல் அசாட்டை சமாதான ஒப்பந்தம் தொடர்பான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு தலைநகர் ஜெருசலேமிற்கு விஜயம் செய்யுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## சதாமை பதவி அகற்ற புஷ் முன்னரே திட்டமாம்!

(வொஷிங்ரன்)

ஈராக்கின் மீது போர்தொடுக்க வேண்டுமென்ற திட்டம், அமெரிக்க அதிபர் புஷ் பதவிக்கு வந்தவுடனேயே தோன்றிவிட்டதாக அவரது அரசில் உயர்பதவி வகித்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சதாமை வெளியேற்றுவதற்கான சந்தர்ப்பத்தை புஷ் எதிர்பார்த்திருந்ததாக அமெரிக்க அரசின் திறைசேரியில் உயர் அதிகாரியாகக் கடமையாற்றிய போல் ஒநெய்ல் குறிப்பிட்டார்.

அமெரிக்க அதிபரின் தேசிய பாதுகாப்புக் குழுவில் அங்கத்துவம் வகித்திருந்ததால், பேரழிவைத் தரக்கூடிய ஆயுதங்கள் ஈராக்கில் இருந்ததற்கான ஆதாரங்கள் எதுவும் இருக்கவில்லையெனவும் தெரிவித்தார்.

போல் ஒநெய்ல் அதிபர் புஷ்ஷின் நிர்வாகத்தில் இரண்டு ஆண்டுகள் பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி ஆப்கானிஸ்தானுக்கு விஜயம்!

(காபூல்)

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி ஹமீட் ஹர்சாயுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக பாகிஸ்தான் பிரதமர் சபருல்லாகான் ஜமாலி காபூலுக்கு விஜயம் செய்துள்ளார்.

பாதுகாப்பு, பொருளாதாரம் தொடர்பான பேச்சுக்களிலேயே அவர் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானின் தென்கிழக்குப் பகுதியில் தொடரும் தீவிரவாதத் தாக்குதல்களின் பின்னால் பாகிஸ்தான் செயற்படுவதாக தெரிவிக்கப்படும் கருத்துக்களால், ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனத்தைப் போக்குவதே இந்த விஜயத்தின் முக்கிய காரணமென




பி.பி.ஸி தெரிவித்தது.

பாகிஸ்தான் பிரதமரின் ஆப்கான் விஜயம் குறித்து கருத்துவெளியிட்ட ஆப்கான் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஓமன் சமாட்,

பாகிஸ்தான் பிரதமரின் வருகை முக்கியமானதொரு காலகட்டத்தில் நிகழ்ந்துள்ளது. இதேவேளை செழிப்பும் நிலையான அரசைக் கொண்டதாகவும் செயற்படுவதற்கும் உதவும் எனவும் தெரிவித்தார்.

பாகிஸ்தான் நிதியமைச்சர் தலைமையிலான குழு ஒன்று ஏற்கனவே ஆப்கான் சென்றிருந்தது. இந்த விஜயத்தின் போது 100 மில்லியன் டொலர்களை ஆப்கானிஸ்தானுக்கு வழங்குவதாக வாக்குறுதி அளித்திருந்தார்.




## மனிதக் குரங்கு வகையான ஓராங் உரேன்ஸ் 20 வருடங்களில் அழிந்துவிடும் அபாயம்!



மனிதக் குரங்கு வகையின் ஒரு இனமான ஓராங்- உரேன்ஸ் 20 ஆண்டுகளில் முற்றாக அழிந்துவிடலாம் என உலக வனவிலங்கு நிதியமும் சர்வதேச சூழலியல் அமைப்பும் கூட்டாகத் தெரிவித்துள்ளன.

கடந்த நூற்றாண்டின் போனியோ, சுமத்மிரா ஆகிய நாடுகளில் அதன் எண்ணிக்கை 91 வீதமாக குறைவடைந்துள்ளது.

1987 ஆம் ஆண்டில் ஓராங் - உரேன்ஸின் எண்ணிக்கை 45,000 ஆக இருந்து 600,000 ஆக காணப்பட்டது. 2001 ஆம் ஆண்டில் அதன எண்ணிக்கை அரைப் பங்காகக் குறைந்தது.

காடுகள் வேகமாக அழிக்கப்பட்டு வருவதே ஓராங் -உரேன்ஸ் அழிவடைந்து வருவதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. தற்போது அவற்றின் எண்ணிக்கை 90,000 வரை இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

வர்த்தக ரீதியாக மரங்கள் வெட்டப்படுவதும் தாவர எண்ணைக்காக மரங்களை வளர்ப்பதற்காக காடுகள் அழிக்கப்படுவதுமே இதற்கு முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது.

மேலும் மலேசியா இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் 80 வீதமான காடுகள் இதுவரை அழிக்கப்பட்டுள்ளன.

இறைச்சிக்காகவும் செல்லப் பிராணியாக வளர்ப்பதற்காகவும் ஓராங்-உரேன்ஸ் காடுகளில் இருந்து அகற்றப்பட்டு வருகின்றன.

மேலும் இதற்கு புகலிடம் அழிக்கப்பட்டு வருவதும் இந்த இனத்தின் வீழ்ச்சிக்கு மற்றுமொரு காரணமாகும்.

ஓராங் உரேன்ஸ் 12 வயதில் கருத்தரிக்க ஆரம்பித்து விடும் 40 ஆண்டு காலம் உயிர் வாழக்கூடியது. ஆனால் 8 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் கருத்தரிக்கும் ஆற்றலையும் கொணடுள்ளது.

## சீனாவில் மீண்டும் சார்ஸ் நோய் அபாயம்; மூவர் தொற்றுக்கு இலக்காகியுள்ளனர்!

(பீகிங்)

சீனாவில் சார்ஸ் நோயின் வைரஸ் கிருமி இதுவரை மூவரைத் தாக்கியுள்ளதாக அந்த நாட்டு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இந்த நோய்க் கிருமியின் தாக்கம் சீனாவின் தென்பகுதி மாநிலமான குசூங் டொங்கில் காணப்படுகிறது.

35 வயதுடைய ஒருவர் வைத்திய பரிசோதனையின்போது சார்ஸ் நோய்க்கிருமியின் தாக்கத்திற்குள்ளாகியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சார்ஸ் நோயின் தாக்கத்திற்கு காரணமாக இருந்த புனுகுப் பூனையுடனோ அல்லது வேறு காட்டு விலங்குடனோ இவர் தொடர்புபட்டிருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே இறுதியாக சார்ஸ் நோயால் பாதிக்கப்பட்டவருக்கு இந்த நோய் எவரிடமிருந்தும் தொற்றிக்கொள்ளவில்லை எனவும் ஆகவே மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.



## ஊர்சுற்றி எழுதுவது

சீனப் பிரதமராக இருந்த சூ-ஆன்லாயும் இந்தியப் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேருவும் நெருங்கிய நட்புறவு கொண்டிருந்தனர்.

இருவரும் பஞ்சசீலக் கொள்கை ஒன்றை உருவாக்கி உடன்படிக்கை ஒன்றும் செய்திருந்தனர்.

உலக அரங்கான ஐக்கிய நாடுகள் சபையில் சீனாவுக்கு உறுப்புரிமை அளிப்பதற்கு அமெரிக்கா தனது வீட்டோ என்ற தடை அதிகாரத்தைப் பாவித்துத் தடுத்து வந்தது.

அமெரிக்கா இந்தத் தடையுத்தரவை பாவித்துத் தடுக்க தடுக்க மீண்டும் மீண்டும் சீனாவுக்கு உறுப்புரிமை கோரி ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை பிரேரணை கொண்டுவரும். இந்தப் பிரேரணை மீது இந்தியாவின் சார்பில் வி.கே. கிருஷ்ண மேனன் மணிக்கணக்கில் பேசுவார்.

இறுதியில் அமெரிக்கா தனது ரத்து அதிகாரத்தைப் பாவித்து பிரேரணையைச் செயலிழக்கச் செய்யும்.

இதன்பிறகுதான் எல்லையில் தனது பிரதேசத்திற்கு சீனப் படைகள் நுழைந்து ஆக்கிரமித்துவிட்டதாக இந்தியா குற்றஞ் சாட்டியது. இந்தியாதான். தனது நிலத்தை ஆக்கிரமித்திருந்ததாக சீனா குற்றஞ் சாட்டியது.

காஷ்மீர் பிரச்சினையில் இந்தியா நேர்மையாக நடந்துகொள்ளவில்லையென்று பாகிஸ்தான் மட்டுமல்ல சீனாவும் கூட கருத்துக்கொண்டிருந்தது.

காஷ்மீர் பிரச்சினையில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவதற்கு ஐக்கிய நாடுகள் சபையில் ஒப்புக்கொண்ட பிரதமர் நேரு, பின்னர் மெதுவாக கைமீறிவிட்டார் என்பது பாகிஸ்தானின் குற்றச்சாட்டு. இதைச் சீனாவும் ஏற்றுக்கொள்கிறது.

கிழக்குப் பாகிஸ்தான் மேற்கு பாகிஸ்தானால் அடக்கி ஒடுக்கப்பட்டது. இதை எதிர்த்து கிழக்கு பாகிஸ்தான் மக்கள் ஷேக் முஜிபுர் அப்துல் ரஹ்மான் தலைமையில் போராட்டம் நடத்தினர். தேர்தலிலும் முஜிபுரின் கட்சி மிகப் பெரும்பான்மைப் பலத்துடன் வெற்றிபெற்றது.

மக்களின் தீர்ப்பை மதிக்காமல் மேற்கு பாகிஸ்தான் இராணுவத்தைக் கொண்டு அடக்குமுறை நடவடிக்கைகளில் இறங்கியது. கிழக்குப் பாகிஸ்தான் மக்கள் ஒரு கோடிக்கு மேல் அகதிகளாக இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். தொடர்ந்து இந்தியப் பிரதமர் நடவடிக்கை எடுத்து வங்காள தேசம் தோன்றச் செய்தார்.

இதன்பின்னர் இந்தியாவுக்கும் வங்காள தேசத்துக்கும் ஏன் உறவு சீர்குலைந்தது?

காஷ்மீர் பிரச்சினையால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் உறவு சீர்குலைந்தது மட்டுமல்ல, இரு நாடுகளுமே போரில் மோதி உறவு கெட்டுப் போனது.

இப்போது இஸ்லாமாபாத்தில் சார்க் மாநாட்டைத் தொடர்ந்து முஷாரப்பும் வாஜ்பாயும் புதிய நட்பு தொடங்கியுள்ளனர்.

இந்தக் கட்டத்தில் இலங்கை இனப் பிரச்சினையில் தலையிடவில்லையென்று உலகுக்குக் காட்டிக்கொண்டிருந்த இந்தியா, இப்பொழுது இலங்கையின் உள்விவகாரத்தில் தனது தலையை நன்றாக நுழைத்து, இலங்கையைத் தனது பிடிக்குள் கொண்டுவருவதற்கு முடிவுசெய்துவிட்டதாகவே தோன்றுகிறது.

அயல்நாடுகளின் உள்விவகாரத்தில் இந்தியா தலையிடுவதில்லையென்ற கொள்கையையே பின்பற்றுகிறதாம். ஆனால், இலங்கை விவகாரத்தில் தலையிடுமாறு இலங்கை அரசியல்வாதிகள்தானே இந்தியாவை வற்புறுத்தி வருகின்றார்கள் என்று இந்திய ஊடகவியலாளர் ஒருவர் சொன்னார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் லண்டனிலிருந்து இந்திய ஊடகவியலாளர் ஒருவர் வந்திருந்தார். அவருடன் பேசிக்கொண்டிருக்கையில், இந்தியாவின் போக்கைப் பார்த்தால் சிக்கிமா மாதிரி இலங்கையையும் இந்திய மாநிலமாக்கிவிடும் போலிருக்கிறதே என்றேன். இந்தியாவுக்கு இப்போதிருக்கும் தலைவலியே போதும். இனியும் வேறு தலைவலியைத் தேடிக் கொள்ளப் போகிறதா? அப்படியெல்லாம் இந்தியா எதுவும் செய்யாது. இலங்கையில் நடக்கும் சம்பவங்கள் இந்தியாவைப் பாதிக்காமல் இருக்கப் பார்த்துக்கொள்ளுமே தவிர வேறெதையும் செய்யாது என்றார்.

யாரை யார் நம்புவது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland



நாற்சந்தி

"மாகாண மட்டத்தில் தேசிய அரசினை அமைக்கும்திட்டம் ஒன்றினை பிரேரிக்கப்போகிறாராம் ரணில் விக்கிரமசிங்க..."

"அதென்னப்பா மாகாணமட்டத்திலான தேசிய அரசு ? இதுக்கு முன்னர் தேசியமட்டத்தில் ஒரு தேசிய அரசை ஏற்படுத்த சந்திரிகா அழைப்பு விடுத்து... அதை ரணில் நிராகரித்திருக்கிறாரெல்ல..."

"ஓமோம்...இப்ப ரணில் மாகாண மட்டத்திற்கு இறங்கி தேசிய அரசை அமைக்கப்போகிறாராம்...இனி இதுக்குச் சந்திரிகா ஓமென்று சொல்லவேண்டுமே...!"

"அதுக்கென்ன சந்திரிகா ஒரு திட்டத்தை முன்வைச்சா, ரணில் வேறொரு திட்டத்தை முன்வைச்சா என்ன...? அப்பதானே அரசியல் சுவையாக இருக்கும்..."

"இதைத்தான் போட்டா போட்டி அரசியல் என்றுசொல்லுறது. முந்தி மாவட்டச்சபை என்றார்கள் பிறகு மாகாண சபை என்றார்கள்... எந்தச் சபையும் எங்கடை சனத்துக்கு ஒன்றையும் கொண்டு வரேல்ல... இப்ப தேசிய அரசு...மாகாண மட்டத்தில் தேசிய அரசு... என்றெல்லாம் ஏதேதோ சொல்லிக் கொண்டு குழப்பவெல்லே பார்க்கினம்..."

"சிங்கள இனவாதிகள் தேசியம் பேசுவது... தமிழ்த்தேசியத்தின் தனித்துவத்தை இல்லாமல் செய்யத்தான்...தெரியுமே மணியம்..."

"பேசுறது தேசிய அரசுபற்றி... ஆனால் நடத்துறதோ இனவாத அரசு... இதுதான் சிங்கள அரசியல் தலைமைகளின்ரை சிறப்பான பண்பு... கனகு..."

தெருவாசி

# துறைமுகங்களின் பாதுகாப்பு அரசாங்கத்தால் அதிகரிப்பு!

நாட்டிலுள்ள அனைத்துத் துறைமுகங்களினதும் பாதுகாப்பு பலப்படுத்தப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

சர்வதேச கடல்சார் கழகத்தின் எச்சரிக்கையை அடுத்தே, துறைமுகங்களின் பாதுகாப்பை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. தீவிரவாத அச்சுறுத்தல்கள் துறைமுகங்களுக்கு இருப்பதாக சர்வதேச ரீதியில் விடுக்கப்பட்ட எச்சரிக்கையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

துறைமுகங்கள் கப்பற்துறை அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீமின் ஆலோசனையின் பேரில் துறைமுக அதிகாரசபை துறைமுகங்களின் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளது.

மேலும் எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் புதிய பாதுகாப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாகவும் அமைச்சர் ரவூக் ஹக்கீம் தெரிவித்தார்.

# சோதியா நினைவு...

இதில் முதல் நிகழ்வாக தமிழீழ தேசியத் தலைவர், மேஜர் சோதியாவின் திருவுருவப் படத்திற்கு ஈகைச்சுடர் ஏற்றி வணக்கம் செலுத தினார். மேஜர் சோதியாவின் திருவுருவப் படத்திற்கு அவருடைய சகோதரன் மலர் மாலை அணிவித்தார். தொடர்ந்து கராத்தே ஆசிரியர் சிஹான் பொனி றொபேர்ட் பரீட்சை வைத்து தெரிவுசெய்யப்பட்ட போராளிகளுக்கு அதற்கான பட்டிகளை தேசியத் தலைவர் வழங்கினார்.

பெண் போராளி ஆர்.ஜிலிற்றின் இரண்டாம் கறுப்புப்பட்டியும், பெண் போராளி பாவரசிக்கு முதலாம் கறுப்புப்பட்டியும், போராளி பூவரசனுக்கு முதலாம் கறுப்புப்பட்டியும், போராளி குயிலியனுக்கு முதலாம் கறுப்புப்பட்டியும் வழங்கப்பட்டன.

அத்துடன் போராளிகளுக்கு இடையே கராத்தே கலையை ஊக்குவிக்கும் வகையில் கராத்தே ஆசிரியர் சிஹான் பொனி றொபேர்ட்டினால் தெரிவுசெய்யப்பட்ட நான்காம் கறுப்புப்பட்டி வழங்கப்பட்ட ஆசிரியர் இரட்ணசோதியை பாராட்டி கௌரவிக்குமுகமாக அவருக்கு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் நினைவுப் பரிசையும் நான்காம் கறுப்புப்பட்டியையும் வழங்கி கௌரவித்தார்.

தொடர்ந்து போராளிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இந்த நிகழ்வில் ஏனைய படையணிகளினதும் தளபதிகள், துணைசார் பொறுப்பாளர்கள், போராளிள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

**Diploma in Hardware Engineering**

உங்கள் கணினிகளை நீங்களே அமைத்துக்கொள்வதற்கான 100% செய்முறைப் பயிற்சிநெறி, எவரும் கற்கலாம். விரிவுரைகள் தமிழில். விரிவுரைகள் ரஷ்ய கணினிப் பொறியியலாளரினால் நடாத்தப்படும்.

பயிற்சிக்காலம் 1 மாதம். காலை, மாலை வகுப்புகள் ஆரம்பம்:- 10.01.04

O/L மாணவர்களுக்கான கணினிப்பயிற்சி
காலை 1 மாதம் ரூபா 1000/= ஆரம்பம் 15.01.04

PI, PII கணினிகள் நம்பமுடியாத மலிவு விலையில்

**NORTH LANKA**
**கணினி நிறுவனம் சங்கானை**

(சீ-2124)

### பெண் போராளிகளின் முகாமிற்குள்

# போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அனுமதியின்றி நுழைந்தது தவறு!

## திருமலை மாவட்ட மகளிர் அரசியல்துறை அறிக்கை

(திருகோணமலை)

பெண்போராளிகளின். முகாமிற்குள் போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினர் அனுமதியின்றி நுழைந்தமை தவறு என திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியல் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பெண் போராளிகளின் முகாமிற்குள் எதுவித முன்னறிவிப்பும் இன்றி இரு போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவின் உறுப்பினர்கள் உட்பிரவேசிக்க முயன்றனர்.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் பெண்போராளிகளின் முகாமொன்றிற்கு கடந்த 6 ஆம் திகதி அனுமதியின்றி போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதிகள் சென்றமை தொடர்பாக திருகோணமலை மாவட்ட மகளிர் அரசியல் பிரிவினர் நேற்று அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளார்கள்.

அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தடுத்து நிறுத்திய எமது போராளிகள் இவ்விடயம் தொடர்பாக மாவட்ட கண்காணிப்புக்குழு தலைவருக்கு தெரிவித்தோம்

அவர் சம்மந்தப்பட்ட இடத்துக்கு வருகைதந்து அவர்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து மன்னிப்புக் கோரினர். இவ்விடயம் தொடர்பாக எமது திருமலை மாவட்ட கட்டளைத்தளபதி கேணல் பதுமனிடம் முறையிட்டிருந்தோம். அவர் அவ்விடயம் தொடர்பாக நோர்வேத்தூதுவர் எரிக்சொல்ஹெய்முடன் பேசினார்.

இச்சம்பவம் நடைபெற்ற இடத்தினைப் பார்வையிடுமாறு அவரைப் பணித்தார். இதுபோன்ற விடயங்கள் இனிமேலும் நடைபெறாது இருக்க உதவவேண்டும் எனவும் அவரிடம் வலியுறுத்தப்பட்டது.

இனிமேலும் இத்தகைய சம்பவங்கள இடம்பெறாதிருக்க அனைவரும் உதவவேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# இந்திய மீனவர்கள் 82 பேரின் வழக்கு விரைவில் உயர்நீதிமன்றத்திற்கு!

## யாழ்.சிறைச்சாலை அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ்.சிறையிலுள்ள 82 இந்திய மீனவர்களினதும் வழக்கு விரைவில் உயர்நீதிமன்ற விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக யாழ்.சிறைச்சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தவிடயம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது,

யாழ்.சிறையில் இந்திய மீன்பிடி படகோட்டிகள் 82 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் 82 படகுகளும் யாழ்.மாவட்ட நீதிமன்றங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளன.

இவர்களது விடுதலை தொடர்பாக ஆராயவென தமிழ் நாட்டைச் சேர்ந்த மீனவர் சங்கத் தலைவரும், சட்டத்தரணி ஒருவரும் கடந்த மாதம் இங்கு வந்து சென்றனர்.

எனினும், சட்டமா அதிபர் இந்திய மீனவர்கள் மீதான விசாரணையை துரிதப்படுத்தி அவர்களுக்கான தீர்ப்பினை உயர்நீதிமன்றத்திலிருந்து பெறுவதற்கான வழக்கினை மிகவிரைவில் தாக்கல் செய்யவுள்ளார்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்தே அவர்களின் தண்டனை பற்றியோ அல்லது விடுதலை பற்றியோ தீர்மானிக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# தமிழ்க்குழுக்களுக்கு பதிவு நடைமுறை

(வவுனியா)

வவுனியாவிலுவுள்ள தமிழ்க்குழு உறுப்பினர்கள் இரவில் தங்காது முகாம்களைவிட்டு வெளியே செல்லும்போதும், திரும்பும்போதும் அவர்களது முகாம்களுக்கு முன்னால் கடமைபுரியும் பொலிஸாரிடம் பதியவேண்டும் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக வவுனியாவில் இனந்தெரியாதோர் மேற்கொண்டுவரும் தாக்குதல்களினால் ஏற்படும் கொலைகளைக் கட்டுப்படுத்தவே இந்த ஏற்பாடு எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (03)

## தம்மிக படுகொலை குறித்து

# பொலிஸாரின் வாக்குமூலத்தைப்பெற கொழும்பு பிரதம நீதவான் முடிவு!

கொழும்பில் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பாதாள உலகத் தலைவர் தம்மிக்க அமரசிங்க சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக சிறைச்சாலை அதிகாரிகளிடம் இருந்து வாக்குமூலங்களைப்பெற கொழும்பு பிரதம நீதவான் போயாகொட முடிவு செய்துள்ளார்.

நீதிமன்ற விசாரணைகளின் போது பொலிஸ் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகளின் பாதுகாப்பிலிருந்த தம்மிக்க அமரசிங்க கடந்த வாரம் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தச்சம்பவம் நடைபெற்ற போது ஹல்ப்ஸ் ட்றொப் நீதிமன்ற வளாகத்தினுள் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த இரண்டு பொலிஸாரின் வாக்குமூலங்கள் பெறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்தவேளை, கொலைச் சந்தேக நபர் தொடர்ந்தும் விளக்கமறியலில் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சுவீடன்...

சமாதான செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. இதில் தற்போதய சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றம், முஸ்லிம்களின் விவகாரம், சிறுவர்களை படைக்குச் சேர்த்தல் மற்றும் வடக்கு - கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற புனர்வாழ்வு அபிவிருத்தி போன்ற விடயங்களே கலந்துரையாடப்பட்டன.

## இராணுவச்...

நீதிவான் அந்தக் கோரிக்கையினை நிராகரித்தார்.

இதேவேளை, இந்தச் சம்பவத்துடன் தொடர்புபட்டதான வாகன இலக்கம் யு.எச்.எ.6191 எனவும், சம்பவம் நடந்தவேளை அந்தவாகனத்தில் இருவர் இருந்ததாகவும் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## விமானப்.....

வாய்ப்பு ஏற்பட்டிக்கிறது. விமானப் படையினர் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்ததால் கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக இத்தகைய தளபாடங்களை புலிகள் இறக்குமதி செய்யமுடியாதிருந்தது என்றும் குறிப்பிட்டார்.

# கண்ணிவெடிகளை அகற்றும் பணி யப்பானிய நிறுவனமும் ஆரம்பிக்கும்

வவுனியாவைச் சூழவுள்ள பிரதேசங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை மோதல் தவிர்ப்புக்கான ஜப்பான் நிலையம் ஆரம்பிக்கவுள்ளது.

இது தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதாக கொழும்பிலுள்ள மோதல் தவிர்ப்புக்கான ஜப்பான் நிலையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உடன்படிக்கையில் இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் கிச்சி றோகுடா நிலையைத்தின் இலங்கைக்கான பிரதிநிதி எக்ஸ் அசாகியும் கைச்சாத்திட்டுள்ளனர்.

சமாதான ஸ்திரத்தன்மை ஆகியவற்றை நிலைநாட்டுவதனையும், புனர்வாழ்வு நடவடிக்கைகளையும் குறிப்பாகக் கொண்டு மோதல் தவிர்ப்புக்களை ஜப்பான் நிலையம் செயற்பட இருக்கின்றது. இந்த நிலையத்தின் கண்ணிவெடி அகற்றும் குழுவினர் எதிர்வரும் மார்ச் மாதம் பணிகளை ஆரம்பிப்பர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சர்வதேச சமூகம்...

எறிந்துவிட்டு, எமது மக்களுடைய நெருக்கடிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் தீர்வு காணவேண்டும். அதற்கான வரைபொன்றை நாம் வழங்கியிருக்கின்றோம். அதை அவர்கள் செவிசாய்க்கவேண்டும்.

அதைவிடுத்த தமது படை பலத்தை கட்டி எழுப்பிக்கொண்டு மீண்டும் எமது மக்களை, எமது உரிமைப் போராட்டத்தை நசுக்க முயன்றால் நிச்சயமாக நாம் அதற்கு தகுந்த பதிலடி கொடுக்கத் தகுதியான நிலையில் இருக்க வேண்டிய கட்டாய நிலையில் நாம் இருக்கவேண்டியுள்ளது.

அரசாங்கம் பிற நாடுகளில் இருந்து ஏராளமான ஆயுதங்களை கொண்டுவந்து குவிக்கும்போது நாம் அவ்வாறு சொல்வது ஒன்றும் உரிய விடயமல்ல. அவற்றை குற்றச்சாட்டாகவும் கருதமுடியாது. இரு பகுதியும் சமபலத்துடன் இருக்கவேண்டிய கட்டாயம் உள்ளது. நாம் சமபலத்துடன் இருந்தால்தான் எம்முடன் சிங்கள அரசாங்கம் பேச முன் வந்தது. அத்னை எவ்வேளையும் நாம் இழப்பதற்கு தயாராக இல்லை.

ஒரு செய்தியை தெளிவாக சொல்கிறோம். எந்த நிலையில் அரசாங்கம் எம்முடன் பேச்சுவார்த்தைக்கு வந்ததோ அதே போக்கைத்தான் நாம் எதிர்பார்க்கிறோம். புலிகள் மீது மட்டும் ஒருபக்கப் பார்வை மூலம் குற்றத்தைச் சுமத்துவது தவறு. அதனைப் பொறுமையாகத் தொடர்ந்தும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. எமக்கு ஒரு வாய்ப்பை வழங்கி இடைக்கால நிர்வாகத்தை தமிழ் மக்கள் கோரியபடி புலிகளிடம் வழங்கி ஒன்றுபட்ட தேசமாக இலங்கையை சமாதானப் பூங்காவாக உருவாக்க அரசு வழியமைக்க வேண்டும். உரிமைக்காகப் போராடிய மக்களுக்கு சரியான தீர்வை வழங்கி இந்தச் சமாதானச் சூழலில் எமது மக்கள் எதனை எதிர்பார்த்தார்களோ அதனை அடைவதற்கான வழியை திறந்துவிடுவதனூடாக இலங்கையின் அமைதிப் பூங்காவாக திகழ வாய்ப்பு ஏற்படும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.